Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 29 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 01 (14.12.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:75

FedEx Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

THIRUMURUGAN COM NET

T.P: 021 222 7835
Fax:021 222 7836
T.P: 021 222 755
Fax:021 222 73

# வடக்கு - கிழக்கில் கடும் மழை; ஒரு லட்சம் பேர் வரை பாதிப்பு!

## 60 ஆயிரம் பேர் வீழிழந்து நிர்க்கதி

(யாழ்ப்பாணம்)

***கிழக்கு மாகாணம் மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பு ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் பல்லாயிரக்கணக் கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். நேற்றுமுன்தினம் முதல் பெய்துவரும் கடும் மழையால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது.***

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுப் பெய்த பெருமழையால் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. வீதிகளை குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. அத்துடன் குளங்களின் நீர்மட்டம் உயர்ந்து வான் பாய்கின்றன. இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் அதன் 11 வான் கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

நேற்றிரவு கிடைக்கப்பெற்ற தகவலின்படி இரணைமடு வான் கதவுகளில் முதலாவது கதவு மூலமாக 2 அடி நீரும், 2 தொடக்கம் 5 வரையான கதவுகளால் 4 அடி நீரும், 6 தொடக்கம் 10 வரையான கதவுகளால் 31/2 அடி நீரும், 11 ஆவது கதவால் 3 அடி நீருமாக வெளியேறும் வகையில் திறக்கப்பட்டுள்ளன.

இந்த 11 கதவுகள் மூலம் செக்கனுக்கு 7833 கனவளவு நீர் வெளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு உடன் நிவாரணம்!

### ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பாதிப்புக்குள்ளானோருக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு - சமூகசேவை அமைச்சையும், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களையும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிகத் தங்குமிடங்கள், சமைக்கப்பட்ட உணவு மற்றும் பொருட்கள் போன்றவை வழங்கப்பட்டுவருகின்றன.

காட்டகஸ்திகிரியாவில் சுமார் 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. யான் ஓயா பெருக்கெடுத்ததில் ஹொரவப்பொத்தானை நகரம் 4 அடி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை விமானங்கள் ரஷ்யாவில் தடுத்து வைப்பு!

(கொழும்பு)

உரிய ஆவணங்களோ அல்லது முன் அனுமதியோ இல்லாமல் ரஷ்யாவின் றொங்றோவ் விமான நிலையத்தில் தரையிறங்கிய - இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு அன்ரனோவ் விமானங்களையும், இரண்டு வான்படை உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 12 சிப்பந்திகளையும் ரஷ்யா தடுத்து வைத்துள்ளது. இவர்களை மீட்டெடுப்பதற்கான முயற்சியில் இலங்கை அரசு தீவிரமுயற்சி எடுத்து வருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு அன்ரனோவ் 32 ரக விமானங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருத்தப்பணிகளுக்காக உக்ரேனின் சீவ் நகரிலுள்ள நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது.

திருத்தவேலைகள் முடிவுற்ற நிலையில் இந்த விமானங்கள் கொழும்பு நோக்கி கடந்த வியாழக்கிழமை பயணித்துக் கொண்டிருந்த போது - எரிபொருள் நிரப்புவதற்காக உஸ் பெகிஸ்தானின் பாகு நகரில் தரையிறங்க அனுமதி கோரப்பட்டது.

ஆனால் முன் அனுமதி வழங்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள்-மினிபஸ் முகமாலையில் கோர விபத்து!

### இருவர் அந்த இடத்திலேயே உயிரிழப்பு!



(யாழ்ப்பாணம்)


முகமாலை இராணுவச் சோதனைச் சாவடிக்கு சமீபமாக மோட்டார் சைக்கிளும் பயணிகள் மினிபஸ் ஒன்றும் நேரெதிரே மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

நேற்று மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது தெல்லிப்பளை வீமன்காமத்தைச் சேர்ந்த சாம்பசிவம் இரகுலதரன் (வயது 26), நுவரெலியா பிரதான வீதியைச் சேர்ந்த நாராயணசாமி இராதாக் கிருஷ்ணன்(வயது 39) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியிலிருந்து பளை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த மினி பஸ்சுடன் எதிர்பாராத விதமாக நேரெதிரே மோதியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக் கடலில் தாழமுக்கம்; மழை தொடரும் சாத்தியம்!



நேற்று மாலை எடுக்கப்பட்ட செய்மதிப்படம்

(கொழும்பு)

தென்மேற்கு வங்களா விரிகுடாவில் ஏற்பட்டிருக்கும் தாழமுக்கத்தினால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருவதுடன் - இதனால் வெள்ள அபாயமும் ஏற்பட்டிருக்கிறது.

நாட்டின் வடக்கு - கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் கடும் மழையினால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. நேற்றுக் காலை 9 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் - மட்டக்களப்பில் 105.5 மில்லி மீற்றரும், யாழ்ப்பாணத்தில் 7.1 மில்லி மீற்றரும், மன்னாரில் 33.2 மில்லி மீற்றரும் பொத்துவிலில் 123.4 மில்லி மீற்றரும் திருகோணமலையில் 92.7 மில்லி மீற்றரும், வவுனியாவில் 115.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தாழமுக்கத்தினால் இன்றும் தொடர்ந்து மழை பெய்வதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மீள்குடியமர்வு கொடுப்பனவு

## வழங்கப்படாததைக் கண்டித்து யாழ். செயலகம் முன் மறியல்!

(யாழ்ப்பாணம்)

மந்திகை, கைதடிப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் தமக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படாததைக் கண்டித்து யாழ். அரச செயலத்தின் முன்பாக நேற்றுக் காலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மந்துவில் வடக்கு, கிழக்கு, மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், கைதடி கிழக்கு, யாழ் 289 ஆவது கிராமசேகவர் பிரிவைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகளும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

தாம் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்களாகி விட்டபோதும் - மீளக்குடியமரும் கொடுப்பனவு தருவதாக ஒருவருடத்திற்கு முன்னரே உறுதியளித்தும் இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இந்தக் கொடுப்பனவை இந்த மாத இறுதிக்குள் வழங்கவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மூதறிஞர் சொக்கனின் இறுதி சடங்கிலிருந்து...









## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நாகராசா சசிகரன் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரமும், நிரந்தர பயண அனுமதி அட்டையும் 12.12. 2004 ஞாயிறு காலை 8-10 மணிக்கிடையில் முகமாலை, கிளிநொச்சி - தருமபுரத்திற்கு இடைப்பட்ட பிரதான வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் புலிகளின் குரல் நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். நா.சசிகரன், கலவெட்டித்திடல், புளியம் பொக்கனை. (சி/3463)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

இளைய தளபதி விஜய், (குளிரூட்டப்பட்டது)
சங்கவி, கவுண்டமணி, செந்தில் நடித்த
**கோயம்புத்தூர் மாப்பிள்ளை** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]
**THE LORD OF THE RINGS**

**நிறஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், நிகிதா நடித்த
**சத்ரபதி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**SPIDER MAN - 2**

**நாகம்ஸ்** சுன்னாகம்

அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
**அட்டகாசம்**
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
மிக விரைவில்
அடுத்த வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதினம்
அர்ஜுன், லைலா,
வடிவேல் நடித்த



**ஜெய் சூர்யா**


## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று மாலை 5 மணிக்கு மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு மருத்துவபீட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்துள்ளார்.


**ராஜா** யாழ்ப்பாணம்.

14ம் திகதிவரை

இந்தியாவில் 200 நாட்கள் ஓடி
சாதனை புரியும் சிறந்த படத்திற்கான
பரிசு பெறவுள்ள சித்திரம் –
குடும்பத்துடன் பார்க்க வேண்டிய படம்

சேரன், சிநேகா, கோபிகா நடித்த
**ஆட்டோகிராப்** (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும்



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வி.ஆலசுந்தரம் மதுஜா

**14.12.2004**

கரணவாய் கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த
ஆலசுந்தரம் சுமதி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி

### செல்வி மதுஜா



அவர்கள் தனது முதலாவது பிறந்த நாளை வேலணையில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா ஆலசுந்தரம், அம்மா சுமதி மற்றும் தாத்தா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், பெரியப்பாமார், சித்தப்பா, சித்திமார், பெரியம்மாமார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்
அ.ஆலசுந்தரம் [அப்பா]

(C/3464)

## எங்கள் மனம் நிறைந்த மகிழ்ச்சிகரமான வாழ்த்துக்கள்

### யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

இன்று

# கூட்டுறவு நகர்

# CO-OP CITY





திறந்து வைப்பதையிட்டு நாம்
பெருமிதமடைகின்றோம். யாழ்.குடா மக்களின்
தேவைகளைப் பூர்த்திசெய்ய உதயமாகும்
இச் சேவையினை கூட்டுறவாளர்களாகிய நாம்
வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
யாழ்.மாவட்ட அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.
யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்.
யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின்சமாசம்.

# அர்ஜூன ரணதுங்க எழுந்துசென்ற சற்றுநேரத்தில் குண்டு வெடித்தது!

## கொழும்பு பிரதி மேயர் தகவல்

(கொழும்பு)

உல்லாசப் பயணத்துறை பிரதி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க எழுந்து மேடைக்குப் பின்புறமாகச் சென்ற வேளையில் குண்டு வெடித்தது.

குண்டு வெடித்ததை அடுத்து அருகில் இருந்த இந்தியத் தூதுவர் நிருபமாராவ் கதறி அழுதார் என்று கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்திய கலைஞர்களின் இசை நிகழ்ச்சியில் நடைபெற்ற கிரனேட் வீச்சு சம்பவத்தின் போது, சம்பவ இடத்தில் நின்ற அசாத் சாலி நேற்றுமுன்தினம் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த அனுபவத்தை விபரித்தார்.

இசை நிகழ்ச்சி நடைபெற்றபோது முன்வரிசையில் நானும், பிரதி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் இந்தியத் தூதுவர் நிருபமாராவ் ஆகியோர் அமர்ந்திருந்தோம. பிரதி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க எழுந்து மேடைக்குப் பின்புறமாகச் சென்ற வேளை குண்டுவெடித்தது.

நான் இருந்த இடத்திலிருந்து சுமார் 4 அல்லது 5 யார் தூரத்தில் குண்டு வெடித்தது. சிலர் நிலத்தில் விழுவதைக் கண்டேன். எனக்கு அருகில் இருந்த நிருபமாராவ கதறி அழுதார்.

உடனே அவரது பாதுகாப்பு அதிகாரிகள் அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

குண்டுவெடிப்பின் சத்தம் பெரிதாகக் கேட்கவில்லை. குண்டு வெடித்ததையடுத்து மக்கள் சிதறி ஓடத் தொடங்கினர். காயமடைந்தவர்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப் பட்டனர்.

இதேவேளை, இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னர் மாலை 4.30 மணியளவில் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களைப் பொலிஸார் தாக்கியதுடன், 12 பேரைக் கைதுசெய்து கறுவாக் காட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர்.

இத்தகைய குண்டுவெடிப்பின் பின்னர் இந்திய உல்லாசப் பயணிகள் இலங்கை வருவார்களா? ஷாருக் கான்தான் இலங்கைக்கு வருவாரா? எனவே இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# நாடாளுமன்றம் முன்பாக போராட்டம்; தமிழக மீனவர்கள் அறிவிப்பு!

மீனவர் பிரச்சினையைத் தீர்க்க வலியுறுத்தி டெல்கியிலுள்ள இந்திய நாடாளுமன்றம் முன்பாக போராட்டம் நடத்தப்போவதாக மூன்றாவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

பாக்கு நீரிணைப் பகுதியில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரும், இலங்கை மீனவர்களும் தாக்கி சிறை பிடித்துச் செல்வது தொடர் கதையாகி வருகிறது.

கடந்த 8 ஆம் திகதியன்று கச்ச தீவு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களைத் தாக்கி, இலங்கைக் கடற்படையினர் ஒரு படகை கடலில் மூழ்கடித்தனர். 15 இற்கும் மேற்பட்ட படகுகளைச் சேதப்படுத்தினர்.

இதேபோல் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி 3 படகுகளையும், 13 மீனவர்களையும் சிறைவைத்துள்ளனர்.

இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்த மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் ஒருவார காலமாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடா - ரொறன்ரோவில்

# தமிழின எதிர்ப்பு மாநாடு தோல்வியில் முடிவடைந்தது

ரொறன்ரோவில் பலத்த பிரசாரத்துடன் மனித உரிமை என்ற போர்வையில் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழின எதிர்ப்பு மாநாடொன்று பலத்த தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இந்த அமைப்பினால் சிறார்களைப் படையணியில் இணைத்தலை மையப் பொருளாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாநாட்டையொட்டிய பிரசாரங்கள் பெரியளவில் மேற்கொள்ளப்பட்டதோடு, தன்னார்வ நிறுவனங்களுக்கும் இது சம்பந்தமான செய்திகள் அனுப்பப்பட்டிருந்தன.

சிறார்களைப் படையணியில் இணைத்தல் சம்பந்தமாகவும், தமிழர் தரப்பு சம்பந்தப்பட்டதாகவும் இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டபோதும், ரொறன்ரோவின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'ரொறன்ரோ ஸ்ரார்' தனது நேற்றைய பதிப்பில் அரச பயங்கரவாதம் தொடர்பான பதிவுகளையும் ஆதாரத் தரவுகளோடு தெளிவாக கோடிட்டுக் காட்டியிருந்தது.

இதன் காரணமாக ஸ்காபரோ நகர மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டு கருத்தரங்காளர்களிடம் எழுப்பிய கேள்விகளுக்கு அவர்களால் பதிலேதும் அளிக்க முடியாத நிலையில் இந்தக் கருத்தரங்கு தோல்வியில் முடிவடைந்தது.

இந்தக் கருத்தரங்களார்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக வைத்தே கேள்விகள் எழுப்பப்பட்டபோது, அரச தரப்பு மற்றும் இராணுவத்திற்கான கொடுப்பனவுகளுடன் செயற்படும் அரச துணைப்படையான ஈ.பி.டி.பி. போன்றவற்றின் செயற்பாடுகள் மேற்படி கருத்தரங்காளர்களால் மறைக்கப்பட்டிருப்பது வெளியரங்கிற்குத் தெரியவந்தது.

இதனால் இந்தக் கருத்தரங்கு திட்டமிடப்பட்ட பாதையில் செல்ல முடியாமல் தமிழர் தரப்பின் நியாயங்களை, தமிழர்களுக்கெதிரான மனிதவுரிமைகளை மாத்திரமே கருத்தரங்காளர்கள் மையமாக கொண்டு செயற்பட வேண்டிய நிலைக்கு அவர்களைத் தள்ளியது.

தமிழர்களின் கருத்தும் தெளிவாக அறியப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, இந்த அமைப்பின் நடவடிக்கை பக்க சார்பானது என்பதனை ஏற்பது போல அது தொடர்பான கேள்விக்கு கருத்தரங்காளர்களால் பதிலளிக்க முடியவில்லை.

சபையடக்கம் மற்றும் நாகரிகத் தன்மையற்ற வகையில் தரக்குறைவாக நடந்து கொண்ட டேவிட்சன் எனப்படும் அரச ஆதரவு ஆயுதக் குழு உறுப்பினருடன் இணைந்தே மண்டபத்தை விட்டு வெளியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழர்களுக்கெதிரான அரசின் மனித உரிமை மீறல்களைப் பற்றிக் கேள்வி கேட்ட ஒருவரின் பின்னாலிருந்து அவரின் அங்கியைப் பிடித்திழுத்த அரச ஆயுதக் குழு உறுப்பினரான டேவிடசன் - அவரைக் கேள்வி கேட்க வேண்டாம் என்று கேட்ட போது, அந்நபர், கட்டுமிராண்டி போல செயற்பட வேண்டாமென்றும், தனது அங்கியை விடுமாறும் டேவிட்சனை கடிந்து கொண்டதையும் மண்டபத்தில் கூடியிருந்தோரால் தெளிவாக அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

# தாக்குதலுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

## அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்!

### ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை இரவு இந்தியக் கலைஞர்கள் கலந்துகொண்ட கலை நிகழ்ச்சியில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு தேவையான பாதுகாப்பு வழங்காத காரணத்தாலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, கலை நிகழ்ச்சியில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நஞ்சருந்திய நிலையில் மீட்கப்பட்ட இருவர் பலி!

(வவுனியா)

நஞ்சருந்திய நிலையில் வவுனியா - பாவற்குளம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட பாடசாலை மாணவி ஒருவரும் இளைஞரும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் வைத்தியசாலையில் மரணமாகினர்.

நெலுக்குளம் பகுதியைச் சேர்ந்த உயர்தரமாணவியான பாலபாஸ்கரன் தர்சினி (வயது - 18) மற்றும் பரிமலை கிருஷ்ணன் (வயது - 22) என்ற இளைஞனுமே மரணமானவர்களாவர்.

பாவற்குளம் பகுதியில் நஞ்சருந்திய நிலையில் இருவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்பே இறந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

# குண்டுவெடிப்புக்கு இந்தியா கண்டனம்!

கொழும்பு - குதிரைப் பந்தயத் திடலில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த, காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளதோடு, அரசாங்கத்துக்கும் தமது கவலையை இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான புலன் விசாரணை முடிவுகள் குறித்து அறிவதற்கு இந்தியா காத்திருப்பதாகவும் இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் இளைஞர்கள் இருவர் கொழும்பில் வைத்து கைது!

கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசிக்க முற்பட்டதாகக் கூறி வான் ஒன்றில் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் உட்பட மூவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் துறைமுகப் பகுதிக்குள் நுழைய முயன்றதாகக் கூறும் கடற்படையினர், அவர்களை இங்குருகொட சோதனைச்சாவடியில் வைத்துக் கைதுசெய்தனர்.

காரைநகரைச் சேர்ந்த சிவபாலன் சிவகரன், நெல்லியடியைச் சேர்ந்த சசிகரன் மற்றும் மட்டக்குளியைச் சேர்ந்த அனுருத்த குமார ஆகியோரே கைதுசெய்யப்பட்டவராவர்.

இவர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.



கடற்புலிகளின் மூத்த உறுப்பினர் லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் வித்துடல் குருநகர் திறந்த வெளியரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது பொதுமக்கள் மதகுருமார் அஞ்சலி செலுத்துகின்றனர்.

# மட்டக்களப்பு பேக்கரி மீது மீண்டும் கிரனைட் வீச்சு!

## ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல பேக்கரி ஒன்றின் மீது (சன்சயின்) நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் மீண்டும் கைக்குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் கைக்குண்டு உள்ளே வீழ்ந்து வெடித்து சிதறியதில் காசாளரான சந்திரகுமார் - இராஜன் (வயது 24) என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தப் பேக்கரி மீது இந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கைக்குண்டு வீச்சுச் சம்பவம் இதுவாகும்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் இந்த பேக்கரி அமைந்துள்ளது. 25 மீற்றர் தொலைவில் பொலிஸ் - இராணுவ கூட்டு வீதித் தடையொன்றும் உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

இனந்தெரியாத நபர் ஒருவர் வாடிக்கையாளர்கள் போல் வந்து இந்தக் கைக்குண்டை வீசிவிட்டுச் சென்றுள்ளார்.

கடும் மழை காரணமாக பேக்கரிக்கு உள்ளே வாடிக்கையாளர்கள் குறைவாகவே காணப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பேக்கரி உரிமையாளர் எஸ்.நந்தகுமார் மட்டக்களப்பு பொலிஸில் புகார் செய்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இன்று வரை மட்டக்களப்பு நகரில் இந்தவாரம் இதுவரை 5 கைக்குண்டு வீச்சுச் சம்பவங்களும், பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவமும் இடம் பெற்றுள்ளன.

# திஸநாயக்கவுக்கு ஆதரவாக கொழும்பில் பாதயாத்திரை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு ஆதரவு தெரிவித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாதயாத்திரை எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்பு - ஹிங்குராங்ஹெட்டவில் இடம்பெறவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் - இந்தப் பாதயாத்திரை எதிர்வரும் 21 ஆம் திகதியன்று கொழும்பில் நடைபெறவுள்ள ஊர்வலத்துடன் இணையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)



பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று இந்திய அணி ஒரு இனிங்ஸ் 140 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றது.

# பங்களாதேஷுடனான டெஸ்ட்: இந்தியாவுக்கு இனிங்ஸ் வெற்றி

டாக்காவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 184 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இதையடுத்து இந்திய அணி முதல் இனிங்ஸில் 526 ஓட்டங்ளைக் குவித்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரண்டாவது இனிங்ஸில் ஆட ஆரம்பித்தது. பங்களாதேஷ் அணி ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்றுக்காலை தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் அணியால் இரண்டரை மணிநேரமே தாக்குப்பிடிக்க முடிந்தது.


இஸ்லாம் ராணா - ரபாஸ் பாஸ்யா ஜோடி, 202 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது - இர்பான் பதானின் பந்துவீச்சில் பிரிந்தது.

35 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ரபாஸ் பாஸ்யா ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக மொர்ரசா களமிறங்கியபோதும் எதிர்முனையில் நின்று பிடித்து ஆடிய ராணா ஆட்டமிழந்தார்.

116 பந்துகளில் 12 பவுண்டரிகளுடன் 69 ஓட்டங்களை ராணா பெற்றிருந்தார். இதன்மூலம் இந்திய அணி இனிங்ஸ் மற்றும் 140 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இர்பான் பதான் 2 ஆவது இனிங்ஸில் ஆறு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். கும்ளே -2, ஹர்பஜன் -1, சகீர்கான் -1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக பதான் தெரிவானார்.




## கங்கூலிக்கு காய்ச்சல்!

(டாக்கா)

பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்டில் முதல் இனிங்ஸில் கங்கூலி 71 ஓட்டங்கள் எடுத்தார். 3 ஆவது நாளான நேற்றுமுன்தினம் அவர் ஆட்டத்தில் பங்கேற்கவில்லை. அவருக்குப் பதிலாக கப்டன் பொறுப்பை ட்ராவிட் கவனித்தார்.

இந்த நிலையில் கங்கூலி சளி மற்றும் காய்ச்சலால் அவதிப்படுவதால் ஆட்டத்தில் களம் இறங்கவில்லையென இந்திய அணி முகாமையாளர் சுதாகர் ராவ் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு



லாஸ் வேகாஸில் இடம்பெற்ற ஹெவி வெயிற் குத்துச்சண்டைப் போட்டியில் விற்றாலி கிலிற்ஸ்கோ - டனி வில்லியம்ஸின் கண் புருவத்தில் குத்துவதையும், இதனால் அவரது கண் புருவம் உடைந்து காணப்படுவதையும் படங்களில் காணலாம். இந்தப் போட்டியில் விற்றாலி கிலிற்ஸ்கோ வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹொக்கியில் இந்தியா தோல்வி பயிற்சியாளர் நீக்கப்படுகிறார்!

ட்ரொபி ஹொக்கிப் போட்டியின் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இந்திய அணி நேற்றுமுன்தினம் மீண்டும் பாகிஸ்தானை எதிர்கொண்டு 2-3 என்ற கோல் கணக்கில் தோற்று 4 ஆவது இடத்தைப் பிடித்தது.

சம்பியன் ட்ரொபி போட்டியில் இந்தியா 6 ஆட்டத்தல் விளையாடி ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. 4 ஆடடங்களில் தோற்றது.

இந்தத் தோல்வியால் பயிற்சியாளர் ஜெரார்ட் மீது கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தனது பயிற்சி குறித்து இந்திய அரசு அதிருப்தி அடைந்து இருப்பதை ஜெரார்ட் ராச் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஜேர்மனியைச் சேர்ந்த ராச் எதென்ஸ் ஒலிம்பிக் போடடிக்கு முன்பு பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். ரவீந்தர் சிங் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டார். சம்பியன் ட்ரொபி போட்டிவரை அவரது ஒப்பந்தம் இருந்தது. ராச்சின் பயிற்சி மகிழ்ச்சியளிக்கும் வகையில் இல்லாததால் ஒப்பந்தம் நீடிக்கப்படவில்லை. அவர் நீக்கப்படவுள்ளார்.

ராச் பயிற்சியாளராக இருந்த எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியா 7 ஆவது இடத்தைப் பிடித்தது. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-4 என்ற கணக்கில் இழந்து இருந்தது.





புதுக்குடியிருப்பு சுப்பர் ராங் விளையாட்டுக்கழக அணிக்கும் லண்டன் தாயக விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப்போட்டி நேற்றுமுன்தினம் மாலை புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற லண்டன் தாயக அணி மற்றும், புதுக்குடியிருப்பு சுப்பராங் கழக அணி வீர்கள் பிரமுகர்களுடன் எடுத்துக்கொண்ட படம்.

# தென்னாபிரிக்க பயிற்சி ஆட்டம் தோல்வி நோக்கி இங்கிலாந்து!



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி அந்த நாட்டின் ‘ஏ’ அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் தோல்வியைச் சந்திக்கும் நிலையிலுள்ளது.

நான்கு நாள் பயிற்சி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 225 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 190 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதல் இனிங்ஸில் 281 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்க ‘ஏ’ அணி 134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸில் ஆடிவருகிறது.

நேற்று பிற்பகல்வரை தென்னாபிரிக்க அணி 1 விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி வீரர் மைக்கல் வோகன் மட்டுமே அதிக பட்சமாக 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஏனையோர் சொற்பட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனா.



# மாவீரர் உதைபந்தாட்டக் கிண்ணத்தை யங்ஹென்றிஸ் அணி கைப்பற்றியது!

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டின் மாவீரர் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி சம்பியனானது.

இதன் இறுதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து சென் அன்ரனிஸ் அணி மோதியது.

இடைவேளைக்கு முன் யங்ஹென்றிஸ் அணியினருக்கு கோலடிக்கும் சந்தர்ப்பம் கூடுதலாக இருந்தபோதும் அவர்களால் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை.

அதைத்தொடர்ந்து 8 ஆவது, 25 ஆவது நிமிடங்களில் கிடைத்த வாய்ப்பையும் அவர்கள் சரியாகப் பயன்படுத்தவுமில்லை. ஆனால் சென் அன்ரனிஸ் அணி வீரர்களுக்கு 34 ஆவது நிமிடத்தில் கிடைத்த கோணர் வாய்ப்பை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி முதலாவது கோலைப் போட்டனர்.

இதில் கோணர் உதையை சென் அன்ரனிஸ் அணி வீரன் றொசாந் அடிக்க, அப்பந்தை பிக்லஸ் தலையால் இடித்துக் கொடுக்க அவ்வணி வீரன் ஜெகதீஸ் மிக அற்புதமாக கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1-0 என்ற கோல் கணக்கில் சென் அன்ரனிஸ் அணியினர் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டபோது இருபக்க அணியினரும் மிகச் சிறப்பாக விளையாடிக்கொண்டிருந்தபோது 7 ஆவது நிமிடத்தில் சென் அன்ரனிஸ் அணியினருக்குக் கிடைத்த நேர் உதையை அதேயணி வீரர் பிக்லஸ் அடிக்க அதனை யங்ஹென்றிஸ் கோல் காப்பாளர் தடுத்தபோது அவரில்பட்டு வெளியில் வந்த பந்தை றெஜீப்ரன் கோலாக்கி தமது அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார்.

ஆனால் யங்ஹென்றிஸ் வீரர்கள் இதற்கு சளைத்தவர்களல்ல என்பதனை உறுதிப்படுத்தும் முகமாக ஒரு நிமிடத்தில் இருகோல்களைப் போட்டு சென் அன்ரனிஸ் அணியினரை அதிர்ச்சிக்குள்ளாக்கினர். இந்த கோல்கள் 15 ஆவது நிமிடத்தில் இடம்பெற்றது.

முதல் கோலை யங்ஹென்றிஸ் வீரர் வினோஜன் அடிக்க, தொடர்ந்து இரண்டாவது கோலை மின்னல் வேகத்தில் மெலோ போட்டு 2:2 என தமது கோல்களைச் சமப்படுத்தினர். அதன்பின்னர் பார்வையாளர்கள் கரகோஷங்களுடன் இரு அணியினர் விளையாடியபோதும் மேற்கொண்டு எந்தக் கோலையும் இரு அணிகளாலும் போடமுடியவில்லை. இதனால் தண்டனை உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதில் யங்ஹென்றிஸ் அணியினருக்கு கிடைத்த 4 சந்தர்ப்பத்தில் 2 கோல்களை மட்டுமே போட்டனர். இதனால் யங்ஹென்றிஸ் வீரர் 5 ஆவது சந்தர்ப்பத்தில் கோலடித்தார். வெற்றி என்ற இலக்கில் பந்தை அடித்தபோது அது வெளியே சென்றது. இதனால் சென் அன்ரனிஸ் வீரர் தமது 5 ஆவது சந்தர்ப்பத்திற்காக அழைக்கப்பட்டார்.

இவர் தமது அணிக்காக கோலைப் போட்டால் சமப்படுத்தலாம் என்ற நிலையில் பந்தை உதைத்தார். அப்பந்தும் வெளியே சென்றது. இதனால் யங்ஹென்றிஸ் அணியினரை சென் அன்ரனிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து 2004 ஆம் ஆண்டின் மாவீரர் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இதில் சிறந்த ஆட்டநாயகனாக யங்ஹென்றிஸ் அணி வீரர் பிக்லஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2ஆவது இடத்தைப் பெற்ற சென் அன்ரனிஸ் அணியினருக்கு வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா வெற்றிக் கேடயத்தையும் 7000/= பணப் பரிசையும், 1 ஆவது இடத்தைப் பெற்ற யங்ஹென்றிஸ் அணியினருக்கு யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி 10000/= பணத்தையும் சம்பியன் கிண்ணத்தையும் வழங்கிக் கௌரவித்தனர். (12)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பாராட்டு நிகழ்வு

(பருத்தித்துறை)

மாகாண மட்டத்திலான நெசவு நிலையங்களுக்கிடையிலான போட்டியில், பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் நெசவு நிலையம் பரிசு பெற்றுள்ளது.

இவ்வாறு பரிசுபெற்ற நெசவு நிலையத்தைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு - கடந்த புதன் கிழமை பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. (14)

### வீதி திருத்தப் பணி ஆரம்பம்

(அளவெட்டி)

அளவெட்டி வடக்குப் பகுதியிலுள்ள சில வீதிகளின் திருத்தப்பணிகளை, வலி.வடக்கு பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது.

அளவெட்டி முதலியார் கோவில் வீதி உட்பட பல வீதிகளும் திருத்தப்படவுள்ளன. இதற்கு வேண்டிய கற்கள் உரிய இடங்களிலே பறிக்கப்பட்டுள்ளன.

மழைகாலம் தொடர்வதால், வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியாதுள்ளது. மிகவிரைவிலே திருத்தப் பணிகள் ஆரம்பமாகும் என, வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் செ.செல்வரத்தினம் தெரிவித்தார். (94)

### 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' மேடையேறுகிறது

(யாழ்ப்பாணம்)

போரால் பாதிக்கப்பட்ட 20 கிராமங்களைச் சேர்ந்த வறிய பெண்களுக்கு உதவுவதற்காக, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் ஓர் அம்சமாக - எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10.30 மணிக்கும், 3 மணிக்கும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" எனும் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (44)

# யுத்தகால இழப்புக்கள் ஓய்வடைய வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன

## யாழ். அரச அதிபர் பத்மநாதன்

கடந்த காலங்களில் யுத்தத்தால் பெருமளவு மக்கள் உயிரிழக்க நேரிட்டது. ஆனால், தற்போது யுத்தம் தணிந்திருந்தும் - அதிகரித்த வாகன விபத்துக்களால் பலர் உயிரிழக்கின்றனர் என, அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற - ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் த.பேரின்பநாயகம் எழுதிய 'சாராத்திய சவால்களும் சாமர்த்தியமும்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

கடந்த காலங்களில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புக்கள் குடாநாட்டில் காணப்படவில்லை. எரிபொருட்களுக்கும் தட்டுப்பாடு இருந்தது. 2002 இல் ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் - குடாநாட்டில் வாகனப் போக்குவரத்துக்கள் வெகுவாக அதிகரித்தன.

அனுமதிப் பத்திரம் இல்லாத வாகனங்களும் வீதிகளில் ஓடத் தொடங்கின. இதனால், குடாநாட்டில் வாகன விபத்துக்கள் அதிகரித்து- விபத்துக்களும், உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

கடந்த வருடத்திலும் இவ்வாறு பதியப்படாத வாகனங்கள் 20 வீதமாகக் காணப்பட்டன. அப்படியான வாகனங்கள் வீதியில் செலுத்தப்படக்கூடாது எனத் தடைவிதித்திருந்தும், இன்று அவை சர்வசாதாரணமாக ஓடுகின்றன.

இதனால், விபத்துக்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

யாழ். குடாநாட்டில் குற்றச்செயல்களால் ஏற்படும் இழப்புக்களைவிட, வீதி விபத்துக்களால் ஏற்படும் இழப்புக்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

எனவே, இவ்வாறான வீதி விபத்துக்களைத் தடுக்கவும், 20 வருடகால யுத்த அவலமும் நீங்க, யாழ். குடாநாட்டுச் சாரதிகள் மட்டுமல்ல- பாதசாரிகள், சைக்கிள் ஓட்டிகள், பொதுமக்கள் என அனைவரும் இந்த நூலில் கூறப்பட்டுள்ள விடயங்களைப் படித்து, அதனை அனுசரித்து நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.



இந்தப் புத்தகங்களின் பிரதிகள் அனைவரிடமும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் குடாநாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத் தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டுறவுச்சபை தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நூலின் ஆய்வுரையை யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்து பிரதி நிதிகளுக்கு நூலின் பிரதிகள் வழங்கப்பட்டன. நூலைப்பற்றிய கண்ணோட்டத்தையும், யாழ். குடாநாட்டின் வீதி விபத்துக்கள் பற்றியும் - யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் கருத்துரை வழங்கினார்.

இவற்றைத் தொடர்ந்து தற்கால வீதி விபத்துக்களைச் சித்தரித்துக் காட்டும் குறும்படம் காண்பிக்கப்பட்டது. குடிபோதையில் வாகனங்கள் செலுத்துவதால் ஏற்படும் விளைவுகள், தூக்கத்தில் வாகனம் செலுத்துவதால் ஏற்படும் விளைவுகள், கதைத்துக் கொண்டே வாகனத்தைச் செலுத்துவதால் ஏற்படும் விளைவுகளைச் சித்தரிப்பதாக இந்தத் திரைப்படம் அமைந்திருந்தது.

15 நிமிடங்கள் கொண்ட குறும்படக் காட்சிகளை - ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ்மா அதிபரும் நூலின் ஆசிரியருமான த.பேரின்பநாயகம விளக்கினார்.

தொடர்ந்து நூலாசிரியர் த.பேரின்ப நாயகத்துக்கு பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டு, தமிழ்த் தாய் வணக்கமும் இடம்பெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் - யாழ். அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி கே.குணராசா உட்பட, யாழ். குடாநாட்டு தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள், ஓட்டோ சங்கப் பிரதிநிதிகள், போக்குவரத்துச் சபை பிரதிநிதிகள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலர் பங்குபற்றியிருந்தனர். (த)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ஆ.மதுஜா
முகவரி : கரவெட்டி.

அகவை ஐந்து



பெயர் : யோ.கிருசாளினி
முகவரி : நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்

அளவெட்டிசீனன் கலட்டி ஞானோதயா வித்தியாசாலையை சூழவுள்ள பகுதிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணிகளை ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த வாரமளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இந்தப் பாடசாலையில் தரம் ஐந்துக்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

உரிய பாதுகாப்பு அற்ற நிலையில், மிதிவெடி அபாயத்துக்கு மத்தியிலேயே இந்த மாணவர்கள் தமது கல்வியை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (94)

### செயலமர்வு

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலை நூலகங்களின் அபிவிருத்தியில் 'பொப்லொப்' செயற்திட்டம் தொடர்பான செயலமர்வொன்று நாளையும், நாளை மறுதினமும் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரிய நூலகர்களையும், பொப்லெப் செயற்திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (44)

# குன்றும் குழியுமாக உள்ள தம்பசிட்டி வீதி

பருத்தித்துறை 1 ஆம் கட்டைச் சந்தியிலிருந்து செல்லும் தம்பசிட்டி வீதியில், வட இந்து மகளிர் கல்லூரி வீதியின் நடுவே பாரிய கிடங்கு ஏற்பட்டுள்ளதால், போக்குவரத்துச் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் மழையால் இநதப் பள்ளத்தினுள் வெள்ளம் தேங்கி நிற்பதால், இந்தப் பாதையூடாகப் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால், வடமராட்சியின் பிரதான பாடசாலைகளான மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி என்பவற்றுக்குச் செல்லும் பாதையும் இதுவாகும். இதனால் மாணவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## காணிப் பிரச்சினையால்

# பாணாவெட்டி வைத்தியசாலை இடமாற்றுவதற்குத் தீர்மானம்

தொல்புரம் -பாணாவெட்டி வைத்தியசாலையின் காணி தொடர்பாகத் தற்போது ஏற்பட்டுள்ள காணிப்பிரச்சினையை அடுத்து, இந்த வைத்தியசாலையை வேறோர் இடத்துக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வைத்தியசாலைக்கும், அந்தப் பகுதியைச் சேர்ந்த தனிப்பட்ட ஒருவருக்கும், வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி வைத்தியசாலை நிர்வாகத்தினர் மற்றும் வைத்தியர்கள், தொல்புரம் மேற்கு கிராம அலுவலர், சங்கானை பிரதேச செயலாளர் மோகன்றாஸ் மற்றும் சங்கானை பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர், இந்தப் பிரிவு சமுர்த்தி அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட தனிநபர் ஆகியோர்களுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில். தனிப்பட்ட நபரின் விட்டுக்கொடுப்பின்மை காரணமாக, விசனமடைந்த வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் வைத்தியர்கள் தரப்பு, தமது சொந்தச் செலவில் வேறோர் இடத்தில் காணியைக் கொள்வனவு செய்து, இந்த வைத்தியசாலையை இடம் மாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பல வருடங்களாக சனநெருக்கம் அதிகமாக இருந்த இடத்தில் இயங்கிவந்த இந்த வைத்தியசாலை இடமாற்றப்படுவதால், நீண்டதூரம் பயணம் செய்தே இந்தப் பகுதி மக்கள் மருத்துவசேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (207)

### பாலபண்டிதர் பரீட்சை

சைவபரிபாலன சபையால் நடத்தப்படுகிற சைவ சித்தாந்த பிரவேச பாலபண்டிதர் தேர்வு, அடுத்த வருடம் மே மாதம் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் - தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (44)

# பனைவள கைப்பணிப் பொருள் கண்காட்சியும், விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் அமைச்சு - கல்வி வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்கு உதவும் அமைச்சால் தொழில்சார் பயிற்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தப் பயிற்சியில், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - பனைவள, கைப்பணி கண்காட்சியும், விற்பனையும் இன்று காலை 10 மணிகசூ பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலக மண்டபத்தில், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.எஸ்.தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்துக்கு - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் கே.சீ.ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும், பனை அபிவிருத்திச்சபை விரிவாக்கல் உத்தியோகத்தர் கே.கே.பாலகிருஷ்ணன், தாளையடி பங்குத்தந்தை அருட்திரு எம். பிரான்சிஸ் அடிகளார், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் க.தீபன், வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச். கே.ஜீவரத்தினம், செம்பியன்பற்று வடக்கு கிராம அலுவலர் வீ.எஸ்.வித்தியாபதி ஆகியோரர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (21)




# மாற்றம் பெறும் நொக்கியா கம்பனி



சர்வதேச அளவில் எவ்வளவு தூரம் போட்டி வந்தாலும், தனக்கென ஒரு தனி முத்திரை பதித்து நொக்கியா கம்பனி இயங்கிவருகிறது. நொக்கியா கையடக்கத் தொலைபேசி நிறுவனம் இவ்வளவு காலமும் இயங்கி வந்த நொக்கியா நிறுவனத்தின் முகாமைத்துவக் குழு முற்றுமுழுதாக மாற்றப்பட இருக்கிறது.

இறுதியாக 1998 ஆம் ஆண்டில் முகாமைத்துவக்குழு மாற்றப்பட்டதன் பிறகு, இப்போது கம்பனிக்குப் புத்துயிரூட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆசிய நாடுகளில் நொக்கியா தொலைபேசிகளின் விற்பனை இதற்குப் பிறகுதான் அதிகரித்தது எனக் கூறப்படுகிறது.

1998 ஆம் ஆண்டுக்கு முதல் ஆசியக் கைத்தொலை பேசிச் சந்தையை மோட்டோ ரோலா கம்பனியே கைப்பற்றி வைத்திருந்தது. இன்றும் சில நாடுகளில் நொக்கியா கையடக்கத் தொலைபேசியின் பாவனை 25 சதவீதம்கூட இல்லை என்று கூறப்படுகிறது. 2006 ஆம் ஆண்டில் உலகத்தின் முதல் மொபைல் தொலைபேசி நிறுவனம் என்ற மைல் கல்லின் அளவு இந்த நிறுவனம் அடையவேண்டும் என்ற உன்னதமான இலக்குடன், கம்பனியின் புதிய நிறைவேற்று அதிகாரி ஜேர்மா ஒலியா பதவியேற்றிருக்கிறார்.

பெரும்பாலும் அடுத்த வருடம் பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து இந்தப் புதிய அணி தனது வேலைகளைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விலங்குகள் பலவிதம்






உலகிலேயே தற்போது மிகவும் வேகமாகப் பெருகிவரும் மிருகம் முயல் என ஆய்வுகள் கட்டியங்கூறுகின்றன. உலகில் காணப்படுகின்ற முயல்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 40 மில்லியன்கள் எனக் கூறப்படுகிறது. இது கடந்த 10 வருடங்களில் 10 வீத அதிகரிப்பு எனவும் சொல்லப்படுகிறது. ஐரோப்பாவில் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையான முலையூட்டிகள் முயல்கள்தான் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைவிட அழிந்துவருகின்ற மிருக இனங்களில் தற்போது முன்னிலை வகிக்கும் விலங்கினங்களாகக் காட்டுப் பூனைகள் காணப்படுகின்றன. ஸ்கொட்லாந்தின் உயர்ந்த காடுகளில் காணப்பட்ட பெருமளவான அழகிய பூனைகள் தற்போது அருகி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், துருவப் பகுதியிலுள்ள பூனைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பறவைகளுடன் ஒப்பிடும்பொழுது மிருகங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு எனக் கருதப்படுகிறது. இதற்குக் கூறப்படும் காரணம் பறவைகள் இலகுவில் பார்க்கக்கூடியவாறிருக்கின்றன. அதிலும், பகலில் காணக்கூடியவாறு இருக்கின்றன.

ஆனால் முலையூட்டி மிருகங்கள் இரவிலேயே உலாவருகின்றன.

# நீரால் குணமாகும் நோய்



நீர் எமது உடலுக்கு மிகவும் இன்றியமையாதது மட்டுமல்ல. அத்துடன் உடலின் சமநிலையைப் பேணுவதில் இது மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் தற்போது விஞ்ஞானிகளின் கூற்றுப்படி தாழ் குருதியமுக்க நோயை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. லண்டனில் உள்ள இப்பீரியல் கல்லூரியில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி 14 மக்கள் பரிசோதனை முடிவுகளின்படி இப்படியான நோயிலிருந்து நீரினால் குணமடைந்திருக்கின்றார்கள். பலதரப்பட்ட இதயநோயாளிகளிடமிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம் அவர்கள் சரியான முறையில் நீரை அருந்தவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அத்துடன் குருதியமுக்கமானது – ஏற்படுவதற்கான பலதரப்பட்ட காரணங்கள் ஆய்வுகளின்படி எடுத்து நோக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அவற்றை நீர் எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதும் கூறப்பட்டிருக்கிறது. நீரைக் குடிக்கமுதல் எடுத்த குருதி அமுக்க வாசிப்பையும் 480 மில்லிமீற்றர் நீரைக் குடித்த பிறகு எடுத்த குருதியமுக்க வாசிப்பையும் எடுத்த நோக்கும்பொழுது இரண்டிலும் மிக ஆக்க பூர்வமான அற்புதமான விளைவுகளைக் காணக்கூடியதாக இருக்கிறது என விஞ்ஞான ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதன்காரணமாக தற்போது ஐரோப்பிய நாடுகளில் மினரல் வாட்டர் என்கின்ற கனியுப்பு நீர் அதிகளவில் விற்பனையாகிறது.

# டொல்பின்களின் இறப்பு



உலகின் பெரிய கடல்வாழ் உயிரினங்களில் ஒன்றாகிய டொல்பின்கள் டஸ்மானியா என்ற இடத்தில் நூற்றுக்கணக்கில் இறந்திருக்கின்றன. அவுஸ்ரேலியா கண்டத்தில் காணப்படுகின்ற இந்த இடம் - கடல்வாழ் உயிரினங்கள் அதிகம் காணப்படுகின்ற இடமாக இருக்கிறது. ஏற்கனவே மரியா என்ற தீவில் இப்படியாக டொல்பின்கள் இறந்திருந்தன. அதன்பிறகு தற்போதுதான் டொல்பின்கள் பெருமளவு இறந்தது கண்டறியப்பட்டுள்ளது. அழகிய கடற்கரைகளுக்குப் பெயர்போன இந்த இடம் தற்போது இறந்து ஒதுங்கிய டொல்பின்களின் கூடாரமாகக் காணப்படுகிறது. இதற்குரிய காரணத்தைக் கண்டறியும் முயற்சியில் ஆய்வாளர்கள் தற்போது ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள்.


உண்மையில் டொல்பின்கள் கடலில் அதிக ஆழம் சென்றுவரக்கூடியதாகக் காணப்படுகின்றன. நீர்ப்பரப்பில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் காரணமாக, இந்த ஒவ்வாமை டொல்பின்களுக்கு ஏற்பட்டு, அவை இறந்திருக்கலாம் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் உள்ளூர் பொலிஸாரின் கருத்துப்படி சட்டவிரோதமாக டொல்பின் பிடிப்புக்கள் அல்லது கடல்வாழ் உயிரினங்களின் பிடிப்புக்கள் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதேவேளை இந்த அழிப்பை அல்லது அழிவைத் தடுக்காவிட்டால், சர்வதேச அளவில் டொல்பின்களின் எண்ணிக்கை குறைவது உறுதி.

# நவீன தொலைக்காட்சி மற்றும் வானொலி



ஐரோப்பிய நாடுகளில் தொலைக்காட்சி பார்த்தல் மற்றும் வானொலி கேட்டல் ஆகியன அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த வருடத்தில் அதாவது முடிந்த 12 மாதங்களில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி கிட்டத்தட்ட 60 வீதமான மக்கள் இன்ரநெட் மூலம் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளைப் பார்க்கவும், கேட்கவும் செய்கிறார்கள். இத்தாலியில் 120 வீதமான மக்கள் இத்தகைய பாவனைக்கு அடிமைகளாகியிருக்கிறார்கள் என, ஆச்சரியப் படக்கூடிய தகவல்கள் தெரிவிக்கின்றன. 2009 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதையும் தொலைக்காட்சிகளும், வானொலிப் பெட்டிகளும் வீட்டுக்கு வீடு ஆக்கிரமிக்கக்கூடும் எனக் கூறப்படுகிறது. இன்ரநெட் வந்தவுடன் தொலைக் காட்சி மற்றும் வானொலிப்பெட்டிகளின் பாவனையில் ஒரு சரிவு ஏற்பட்டது. ஆனால், தற்பொழுது திடீரென இவற்றின் விலைகளும் அதிகரித்திருக்கின்றன. இதேவேளை இவற்றின் பாவனையில் ஏற்பட்ட அதிகரிப்புத்தான் இதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது. இதற்கு முக்கியமான காரணமாக அமைவது டிஜிற்றல் தொழில்நுட்பம் எனக் கூறப்படுகிறது. இப்போது சந்தையில் காணப்படு கின்ற இலத்திரனியல் தொடர்புசாதனங்கள் எல்லாம் ஏட்டிக்குப் போட்டியாக நவீன தொழில் நுட்பத் திறனுடன் காணப்படுகின்றன. அதில் மிக முக்கியமாக கோம் தியேட்டர் என்பது ஒரு மைக்கல்தான் எனக் கூறப்படுகிறது.

# மலேரியாவில் பறவைகள்



அரிதான பறவையினங்களில் ஒன்றாகிய காவய்யற் பறவை - மலேரியா நோயால் எண்ணற்றளவில் இறக்கத் தொடங்கியிருக்கின்றன. கடந்த 31 ஆண்டுகளுக்குப்பிறகு, பறவைகளில் இப்படியான ஒரு நோய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மிருக ஆராய்ச்சியாளர்கள் இந்த நோயை ஆரம்பத்தில் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் காலப்போக்கில் இத்தகைய நோயின் தாக்கம் அரிதான பறவைகளை அழிக்கத் தொடங்கியது. இதன் போதுதான் இதைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் கருதத் தொடங்கினார்கள். இத்தகைய பறவைகளுக்கு ஆரம்பத் தில் ஏற்பட்ட மலேரியாநோய் காலப் போக்கில் மற்றைய பறவைகளுக்கும் வெகுவாகவே தொற்றத் தொடங்கியது. 1995 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 7 பறவையினங்களுக்கே இந்த மலேரியாநோய் ஏற்பட்டிருந்தது. ஆனால், 1997 ஆம் ஆண்டில் அது மூன்று பறவைகளாகக் குறைந்தது. இதன் காரணமாக இந்த நோயைப் பற்றி ஒருவரும் பெரிதாகக் கருதவில்லை. ஆனால் 2002 ஆம் ஆண்டளவில் மலேரியா நோயால் தாக்க மடைந்த காவய்யற் பறவைகளின் எண்ணிக்கை 200 ஐத் தாண்டியது. பறவை களுக்கு வருகின்ற இந்த நோய் - மனிதர்களுடைய நோய் போன்றல்லாது ஒரு வித்தியாசமாக வருகிறது. இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

## திரை விமர்சனம்

# மகா நடிகன்

வழக்கமான சினிமா நடிகன் + முதல்வர் மசாலாப்படம்தான் இது. தான் பெரிய ஆளாகவேண்டும் என்பதற்காகப் பலதரப்பட்ட கெட்ட செயல்களைச் செய்து முதல்வராகின்றார் சத்தியராஜ். ஒரு கட்டத்தில் தனது பிழையை உணர்ந்து தானும் திருந்தி, அரசியலையும் திருத்த நினைக்கிறார் சத்தியராஜ். இது நடக்குமா? நடக்காதா? இது தான் படத்தின் முடிவு.




சத்தியராஜ் சக்தி சிதம்பரம் கூட்டணியினருடைய படம் இது. முதலில் தான் நடித்த படத்துக்குக் கூட்டம் வராமல் போக மும்தாஜை தற்கொலை முயற்சிக்கு நாடகமாடவைத்து, படத்தை ஓட வைக்கிறார். வழமையான நடிகர்கள் போல பத்திரிகையில் பேட்டி கொடுத்து நடிகர்களுக்கு நல்ல கடிகடிக்கின்றார் சத்தியராஜ். ரமேஷ் கண்ணாவுடன் சேர்ந்து தற்போது இந்தியாவில் இருக்கும் அரசியல் வாதிகளுக்கும் கலகலப்பான பாடம் புகட்டப்படுகிறது. இந்தப் படத்தில் இரண்டு கதாநாயகிகள் – மும்தாஜ், நமிதா ஆகிய இருவரும் போட்டிபோட்டுக்கொண்டு நடித்திருக்கிறார்கள்?? இந்தப்படத்தில் மனோஜ் ஒரு சிறிய பாத்திரத்தில் வருகின்றார். ஆட்டோக்கிராப் படத்தின் நாயகி மல்லிகா கலெக்டராக நடித்திருக்கிறார்.


வாசு, விசு, டி.பி.கஜேந்திரன் என இயக்குநர்களும் இந்தப் படத்தில் தலை காட்டயிருக்கிறார்கள். இந்தப் படத்தின் இசையமைப்பாளர் தன்னுடைய பங்கைச் சரியாகச் செய்யவில்லை. திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகியவற்றை சத்தியராஜின் கடியுடன் சேர்த்துக்கொடுத்து விட்டிருக்கிறார் இயக்குநர் சக்தி சிதம்பரம்.

"மகா நடிகன்" மெகா ஹிட் இல்லை.

– ஜெயா –

# தந்தை இல்லாத குழந்தை

விந்து இல்லாமலேயே முட்டைகளைக் கருக்கட்ட வைக்கமுடியும். என்ற ஆய்வு வேல்ஸ் பல்கலைக்கழகத்தால் செய்து முடிக்கப்பட்டு வருகிறது. தந்தையின் நிறமூர்த்தங்கள் இன்றித் தாயின் நிறமூர்த்தங்களை மட்டுமே வைத்து முட்டைகள் கருக்கட்டப் படவைக்கின்றன. இதற்கு ஒருவகையான புரோட்டின் பயன்படுத்தப்படுகிறது. அது பி.எல்.சி. செற்றா என அழைக்கப்படுகிறது. இது ஆண் விந்துக்களை உருவாக்கக்கூடியதாகவும், முட்டைகளைக் கருக்கட்டவைக்கக் கூடியதாகவும் இருக்கிறது என, விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். இதன் காரணமாகத் தந்தை இல்லாமலேயே ஒரு தாய் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சட்டபூர்வமாக்கப்படுவது மிகவும் கடினம். அத்துடன் இப்படிக் கருக்கட்டப்படும் முளையம் எவ்வளவு தூரம் ஆரோக்கியமாக இருக்கும் என்பது உறுதியாகக் கூறமுடியாது எனவும் விஞ்ஞானிகள் ஐயம் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய முயற்சியைக் கூடுதலானோர்கள் வரவேற்றிருக்கிறார்கள். இதில் என்ன அற்புதம் என்றால், இரட்டைக் குழந்தைகளை ஒரே மாதிரியாக உருவாகவைக்கவும் இந்த ஆராய்ச்சி உதவும் எனக் கூறப்படுகிறது.



# அப்பிள் கம்பனியின் தில்லு முல்லு

கணினி உலகின் ராஜாவாகத் திகழ்கின்ற அப்பிள் கணினி நிறுவனம் தற்போது ஒரு சிக்கலில் மாட்டியிருக்கிறது. ஐரோப்பிய யூனியனின் கருத்துப்படி, இந்த நிறுவனம் கணினிச் சேவைகளுக்கு மிகக்கூடிய கட்டணத்தை வழங்குவதாகக் கூறப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் கூடுதலாக அப்பிள் கணினிகளே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.



சாதாரண சேவைகளை விட, ஒலியமைப்பு அதாவது கணினி மயப்படுத்தப்பட்ட ஒலியமைப்புக்குக் மிகவும் கூடுதலான கட்டணத்தை அப்பிள் கம்பனி அறவிடுகிறது. நாட்டுக்கு நாடு அதனுடைய கட்டண விகிதம் வேறுபடுவதாகவும் கூறப்படுகிறது. உதாரணமாக – இங்கிலாந்தில் டவுன் லோட் பாடல் ஒன்று 79 பென்னியாகவும், ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் 68 பென்னியாகவும், அமெரிக்காவில் 51 பென்னியாகவும் அத்துடன் கனடா நாட்டில் 43 பென்னியாகவும் அப்பிள் கம்பனி கட்டணங்களை அறவிடுகிறது. ஐரோப்பாவில் அதிக கட்டணமாகவும், அமெரிக்காவில் குறைந்த கட்டணமாகவும் இது இருப்பதற்கான காரணம் அங்கே போட்டியாகப் பல முன்னணிக் கணினி நிறுவனங்கள் இருப்பதனாலாகும் எனக் கூறப்படுகிறது. இந்தப் போக்கில் அப்பிள் கம்பனி நடக்குமானால், சர்வதேச அளவில் அது பல வாடிக்கையாளர்களை இழக்க நேரிடும் எனத் தொழில் நுட்பவியலாளர்கள் கூறுகிறார்கள்.

# 3 ஜி – சரியும் செல்வாக்கு

3ஜி கையடக்கத் தொலைபேசிகள் தற்போது பாவனையாளர்களின் மனதைவிட்டு விலகத்தொடங்கியிருக்கின்றன. ஏன் என்ற ஆராய்ச்சிகளை வொடபோன் நிறுவனம் மேற்கொண்ட பொழுது பல குறைபாடுகள் இந்தக் கையடக்கத் தொலைபேசிகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அதில் மிக முக்கியமாகத் திகழ்வது சிக்னல் குறைபாடு. ஐரோப்பாவின் சில இடங்களில் நோ சிக்னல் காணப்படுவதனால் பாவனையாளர்கள் இதை வெறுக்கிறார்கள். கடந்த நான்கு வருடத்துக்கு முன் ஏறக்குறைய 22 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் வரை இத்தகைய போன் நெற்வேக்கிற்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் நன்றாக இயங்கியபோதிலும் கடந்த சில வருடங்களில் ஒரேஞ்ச் மற்றும் ரி-மொபைல் ஆகிய நிறுவனங்களிடம் இந்த 3ஜி தோற்றுவிட்டது என்றே கூறவேண்டும். ஆனால் வருகின்ற கிறிஸ்மஸ் பண்டிகையின்போது பல அற்புதமான சலுகைகளை, எல்லா மொபைல் தொலைபேசி நிறுவனங்களும் வழங்க இருக்கின்றன. ஆனாலும் 3ஜி நிறுவனம் இவற்றை எல்லாம் மிஞ்சும் அளவுக்கு ஏதேனும் செய்தால்தான் தப்பிப்பிழைக்க முடியும் எனவும், 2007 ஆம் ஆண்டில் தங்களுடைய சரிந்த செல்வாக்கை நிறுத்த முடியும் எனவும் தொழில்நுட்ப வல்லுநர்கள் கூறுகிறார்கள்.





# நவீன விவசாயம்

விவசாயத்துறையில் எத்தனையோ நவீன தொழில்நுட்பத்திறன்கள் எல்லாம் வந்திருக்கின்றன. பாரம்பரியமான முறைகளில் விவசாயம் செய்வது என்பது தற்போது மலையேறிவிட்டது. ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்ற விளை நிலங்கள் எல்லாம், வருடத்தின் எந்தக் காலத்திலும் பயிர்செய்யக் கூடியவாறு நவீன தொழில்நுட்பத்திறன்களைப் பயன்படுத்தக் கூடியவாறுள்ளன. 2012 ஆம் ஆண்டளவில் பெரும்பாலான விளைநிலங்கள் நவீனமுறையில் பயிரிடக் கூடியதாகவும், அத்துடன் மிக உயர்ந்த விளைச்சலைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் எனவும் கருதப்படுகிறது. நவீன தொழில்நுட்பத்துடன் வளருகின்ற தாவரங்களுக்குரிய நீர்ப்பாசனம் முதல், அறுவடைவரை மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஏனெனில் இவை எல்லாம் இயற்கையை மிஞ்சிய செயற்பாடுகளாக இருக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் பொதுவாகத் தாவர வளர்ப்பை ஊக்கப்படுத்தின் ஆனால் மிருகவளர்ப்பினை அவ்வளவாகக் கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் உலகச் சந்தையில் பாலுணவுப் பொருட்களின் விலையின் அதிகரிப்பு ஐரோப்பிய நாடுகளின் மிருக வளர்ப்புக்கான ஊக்கத்தை அதிகரித்திருக்கிறது. ஒரே நாளில் உழுது, பன்படுத்திப் பயிரிடுவது என்பது மிகவும் கடினமான காரியமாக இருந்தது. ஆனால் இப்போது ஒரு நாளிலேயே பரிசீலிக்கக் கூடியமுறையில் நவீனகர உழுதல் மற்றும் பண்படுத்தலுக்கான இயந்திரங்கள் வந்துவிட்டன. இது அமெரிக்க நாட்டுக்கு ஒரு போட்டியான செயற்பாடாகக் கருதலாம்.



# சூப்பர் ரொக்கட்



ஐரோப்பாவின் சூப்பர் விண்வெளிக்கலம் அரியன் 5 ஈசீஏ தன்னுடைய ஆய்வுகளை முடித்துக்கொண்டு, 2005 ஆம் ஆண்டு ஜனவரி வெற்றிகரமாக விண்வெளிக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பாவின் கூடுதலான செய்மதிகளைத் தன்னுடையகட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற இந்த விண்கலம் – ஏற்கனவே அனுப்பப்படவேண்டியது. ஆனாலும் சில தொழில்நுட்ப வேலைகள் காரணமாகப் பொறுமையாக விண்வெளிக்குச் செலுத்தப்பட்டு இருக்கிறது. டிசம்பர் 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட ரொக்கட் விபத்து உலகின் எல்லா விண்வெளி ஆய்வுகூடங்களையும் மீண்டும் மீண்டும் பரிசோதித்துவிட்டே, விண்கலங்களை வான் வெளிக்கு ஏவத் தூண்டியிருக்கிறது. ரொக்கட் இஞ்சின்கள் குளிர்வதற்காக மிக விசேடமான முறையில் தயாரிக்கப்பட்ட குளிர்த்திகள் இங்கே காணப்படுகின்றன. இதிலே பொருத்தப்பட்டது வல்கெயின் 2 என்ற சூப்பர் இயந்திரமாகும். இந்த வகை இயந்திரம் தானாகவே இஞ்சின் சக்தியைக் கூட்டவும், குறைக்கவும் வல்லது. இது ஐரோப்பிய விண்வெளி ஆய்வு கூடத்தால் அமைக்கப்பட்டு இருந்தாலும், இதனுடைய பயனைப் பிரான்ஸ் நாடும் அதாவது பிரான்ஸ் உடைய பாதுகாப்பு அமைச்சும் பெறுகின்றது என்பது மறைவான உண்மை.

## வவுனியா- செட்டிகுளம் பிரதேசத்தில் யானை கிணற்றில் வீழ்ந்து மரணம்

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் காட்டு யானை ஒன்று கிணற்றில் வீழ்ந்து இறந்தது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முகத்தான்குளம், இரண்டாம் பண்ணை ஆகிய பகுதி மக்கள்- இராணுவ நடவடிக்கையால இடம் பெயர்ந்து சென்ற நிலையில், இந்தக் குடியிருப்புப் பிரதேசங்கள் பெரும் காடாகக் காணப்பட்டன.

தற்போது இங்கு காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த வாரம் காட்டுயானை ஒன்று கிணற்றில் வீழ்ந்து இறந்தது.

இதேபோன்று கடந்த வியாழக்கிழமையும் ஒரு காட்டு யானை கிணற்றுக்குள் விழுந்து இறந்தமை குறிப்பிடத்தக்கது.






பாண்டியன்குளம் - மல்லாவி வீதி இதுவரையில் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.

## கிளிநொச்சியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'சீர்மைப்பாடு' சுயமுயற்சித் திட்டத்தால் உதவிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு - புலம் பெயர்வுக்கான சர்வதேச நிறுவனமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து 'சீர்மைப்பாடு' எனும் சுயமுயற்சித் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தில் இதுவரையில் 300 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். இதில் 50 பேருக்கு 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் வரை சுய தொழில் புரிவதற்கான பணம் வழங்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் திறமைக்கேற்ப தையல் இயந்திரங்கள், சிறுவர்த்தக நிறுவனங்கள் தொடங்குவதற்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

காணிகள் முறையாகப் பண்படுத்தப்பட்டுக் காணப்பட்ட இடங்களில், பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் வாங்கிக் கொடுக்கப்பட்டது.

இதைவிட கோழி, ஆடு, மாடு வளர்ப்பதற்கு 25 பேர் இனங் காணப்பட்டு, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான சமுதாய முன்னேற்றக்கழகத்தின் உதவியுடன் நிதியுதவி வழங்கப்பட்டது.

மேலும் 6 பயனாளிகளுக்கு உழவு இயந்திர திருத்துநர் பயிற்சி, தையற்பயிற்சி போன்ற பயிற்சிகளை பயிலுவதற்கு நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 300 பயனாளிக்கு சீர்மைப்பாடு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக காலக்கேடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இந்தத் திட்டம் பூரணப்படுத்தி செயற்படுமிடத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், புலம் பெயர்வுக்கான சர்வதேச நிறுவனமும் இந்தத் திட்டத்தை திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளன.

### ஒளிவிழா நிகழ்வு

கிளிநொச்சி - இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வு இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் திருப்பலிப் பூசையும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் தபால் பெட்டிகள் சேதமடைந்துள்ளன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசங்களின் பல பகுதிகளில் தபால் பெட்டிகள் இன்மையால் இந்தப் பிரதேச மக்கள் அஞ்சல் தொடர்புகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பூநகரி தம்பிராய் சந்தி, கறுக்காய்த்தீவுச் சந்தி, பள்ளிக்குடா, கௌதாரிமுனை, ஞானிமடம் சந்தி ஆகிய பிரதேசங்களில் காணப்பட்ட தபால்பெட்டிகள் - தற்போது திருத்தப்படாது, பாவனையற்றுக் காணப்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் தமது தபால் தொடர்புகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

### உலர் உணவு இதுவரையில் வழங்கப்படவில்லை

கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பிரதேச மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் இதுவரையில் வழங்கப்படவில்லை.

இந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள், வீதிகள், மயானங்கள் போன்றன இந்தப் பகுதி மக்களால் புனரமைப்புச் செய்யப்பட்டன.

இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும், நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரையில் இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லையென இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



பாண்டியன்குளம் சந்தைப் பகுதியில் அமைக்கப் பட்டு, எதிர்வரும் 31 ஆம் திகதி மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவேண்டிய பொதுக்கிணறு இதுவரையில் கட்டட வேலைகள் இடம்பெறாத நிலையில் காணப்படுகிறது.


## மன்னாரில் ஹயேஸ் வான் மோதியதில் சுத்திகரிப்பு மேற்பார்வையாளர் காயம்

(மன்னார்)

மன்னார் நகரத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் முன்பாக, சுத்திகரிப்பு தொழிலாளர்களை மேற்பார்வை செய்து கொண்டிருந்த ஒருவர் மீது - வீதியால் வந்த ஹயேஸ் வான் மோதியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவத்தின் போது மன்னார் மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் மேற்பார்வையாளர் அ.பாவிலு (வயது 45) என்பவரே காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது - காலை சுத்திகரிப்பு தொழிலாளர்களை மேற்பார்வை செய்துகொண்டு இருந்த சமயம், வேகமாக வந்த ஹயேஸ் வான் மோதியதில், காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



முல்லைத்தீவு - மல்லாவிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட 16 கரும்புலிகளின் திருவுருவப்படம் தாங்கிய நினைவாலயத்தைப் படத்தில் காணலாம்.

### பயன்தரு மரக்கன்றுகள் நடுகை

வவுனியா வடக்கு பிரதேசத்தில் பயன்தரு மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன.

வவுனியா வடக்கு பிரதேச சபையினரால் ஏ-9 வீதியின் இரு பக்கங்களிலும் காடுகள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பாக பயன்தரு மரங்கள் நடுகை செய்யப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக 100 மலை வேம்புகள் நடுகை செய்யபட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## பொதுச்சந்தை இல்லாததால் புளியங்குள மக்கள் அவதி

வவுனியா வடக்கு - புளியங்குளம் பிரதேசத்தில் பொதுச்சந்தை இன்மையால், இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் பொதுச் சந்தை இன்மையால் மக்கள் தமது விவசாய விளைபொருட்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

இதைவிட தமக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக வவுனியா வடக்குப் பிரதேச சபையினர் கருத்து தெரிவிக்கையில் -

சந்தைப் பகுதிக்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு, இந்தப் பகுதி வர்த்தகர்களால் பலவந்தமாகப் பிடிக்கப்பட்டுள்ளமையால், பொதுச் சந்தையை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

## அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மன்னார் - கண்ணாட்டி பகுதி மக்கள்

மன்னார் - கண்ணாட்டி பிரதேச மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி, மிக நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது படையினரால் கைப்பற்றப்பட்டு பின் மீட்கப்பட்ட இந்தப் பிரதேசத்தில் தற்போது 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் - இந்தக் கிராமத்திலோ, கிராம மக்களுக்கோ எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தக் கிராமத்துக்கான மருத்துவவசதி, போக்குவரத்துவசதி, கல்விவசதி என்பன இந்தப் பிரதேசத்தில் இல்லாமையால், இங்கு வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தின் முன்பள்ளி நிரந்தரக் கட்டடமின்றியும், அடிப்படை வசதியற்ற நிலையிலும் ஆலயக் கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இதனால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை உரியமுறையில் மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் இந்தக் கிராம மக்கள் கவலை அடைந்துள்ளதுடன், சம்பந்தப்பட்டவர்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் கேட்டுள்ளனர்.

### அணைக்கட்டு பலப்படுத்தும் திட்டம்

வட்டக்கச்சி - இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தினரால் மம்மிகுள அணைக்கட்டு பலப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தை மாயவனூர் வட்டக்கச்சிப் பிரதேச மக்கள் இணைந்து, இந்தக் குள அணைக்கட்டைப் பலப்படுத்துவதற்காக மம்மி மயானத்துக்குச் செல்லும் வீதியை மண் அணையாக அமைத்து வருகின்றனர்.

இதனால் மம்மிக்குளம் ஆழமாவதுடன், மயானத்துக்குச் செல்லும் வீதியும் திருத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (9,இ)

## முல்லைத்தீவு - முறிகண்டிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

முல்லைத்தீவு - முறிகண்டிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

திருமுறிகண்டி ஆலயப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இந்தப் பிரதேசத்தின் உணவகங்கள், பொது இடங்களில் அதிகளவான கட்டாக்காலி நாய்கள் காணப்படுகின்றமையால், மக்கள் அடிக்கடி நாய்க்கடிக்கு இலக்காகி வருகின்றனர்.

அத்துடன், இந்தப்பகுதி உணவகங்களின் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையாலும், தொற்று நோய்கள் பரவும் அபாயநிலை காணப்படுகிறது.

### சேதமடைந்த நிலையில் வீதி

புளியங்குளம் - முல்லைத்தீவு வீதி படுமோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வீதி மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதியில் பாரிய குழி காணப்படுவதால், வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நாள்தோறும் நாடி முறைசெய்யா மன்னவன்*
*நாள் தோறும் நாடுகெடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தொடரும் சந்தேகங்களும்.... தளரும் நம்பிக்கைகளும்....

சமாதானத்தின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின் அடிப்படையிலான மக்களின் கனவுகள் நாளுக்குநாள் சிதைந்துகொண்டே போவதை அன்றாடம் வெளிவரும் செய்திகள் உணர்த்துவதாக உள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சியதிகாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், பல தசாப்தகால இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண சர்வதேச ஆதரவுடனும், நோர்வே அரசின் அனுசரணையுடனும் கடந்த - கலைக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் ஒரு நிரந்தரமான தேக்கநிலையை எட்டிவிட்டதென்றே கூறவேண்டும்.

இதற்கான காரணங்களை திரும்பத் திரும்ப விபரிக்க வேண்டிய அவசியமே இல்லை.

சமாதான எதிர்ப்பையும் தமிழின விரோதத்தையும் இலட்சிய இலக்காகக்கொண்ட ஐ.ம.சு.முன்னணிக் கூட்டணியில் உள்ள பேரினவாத அதிகாரவெறிகொண்ட கட்சிகள் ஆரம்பம் முதலே இன்றைய சமாதான முயற்சிகளை மூர்க்கத்தனத்துடன் நிராகரித்துப் புறந்தள்ளியே வந்துள்ளனர் என்பதையும் விபரிக்க வேண்டிய தேவையுமில்லை.

ஆனாலும் அவர்கள் சமாதானத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே அதனை நிராகரித்துவந்தமைதான் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும். அதாவது அமைதி முயற்சி நகர்வு தொடர்பாக ஒரு காலம் கடத்தி ஏமாற்றும் தந்திரோபாயத்தையே அரசும், அதன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவியும் தொடர்ந்து கையாண்டு வந்துள்ளார்கள் என்பதே உண்மையாகும்.

கடந்த சில வாரங்களாக அரசாங்கமும் படைத்தரப்பினரும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளில் அரசுக்கிருக்கும் அக்கறையீனத்தை மட்டுமல்ல, வெறுப்பையும் அதனை எப்படியாவது குழப்பி மீண்டும் ஓர் கொடிய யுத்தத்தை ஆரம்பிக்கும் முனைப்பில் அவர்களுக்கு இருக்கும் பேரார்வத்தையும் வெளிப்படையாக இனங்காட்டியுள்ளது.

குறிப்பாக தேசியத் தலைவரின் ஐம்பதாவது பிறந்தநாள் மற்றும் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை மக்கள் செய்துகொண்டிருந்த வேளையில் மன்னார் - வவுனியா போன்ற பகுதிகளில் குறிப்பாகவும், ஏனைய வடக்கு - கிழக்கு பகுதிகளில் பொதுவாகவும் படைத்தரப்பினர் மேற்கொண்ட அடாவடித்தனமான மனித உரிமை மீறல் மற்றும் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் முற்றுமுழுதான சமாதான சூழலை தகர்க்கும் மூர்க்கத்துடன் கூடிய போர் நிறுத்த உடன்பாட்டை அவமதிக்கும் - நிராகரிக்கும் நடவடிக்கைகளேயாகும்.

இது தொடர்பாக அரச - மற்றும் ஜனாதிபதி மட்டத்தில் எந்த விதமான நடவடிக்கையையும் ஆக்கபூர்வமான வகையில் மேற்கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

இந்த வகையில் பார்த்தால் அரசும் - ஜனாதிபதியும் இம்மாதிரியான சமாதான முயற்சிகளைக் குழப்பி மீண்டும் அமைதியற்ற போர்ச்சூழலை உருவாக்கும் பேரினவாத சக்திகளதும், படைத்தரப்பினரதும் நடவடிக்கைகளுக்கு மௌன அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள் என்றே கருதவேண்டியுள்ளது.

மீண்டும் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்ம் குழப்பமும் சிக்கலும் நம்பிக்கையற்ற சூழலும் நிலவும் நிலையில் முறிந்துபோகும் நிலையை எட்டியுள்ள போர்நிறுத்த உடன்பாட்டைப் பாதுகாக்கும் நோக்குடன் கொழும்புக்கு வந்துள்ளார்.

நிச்சயமாக அரச தரப்பிலிருந்தோ ஜனாதிபதி தரப்பிலிருந்தோ அவருக்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான உத்தரவாதமும் கிடைக்கப்போவது கிடையாது. அதற்கான சூழலோ சமிக்ஞையோ தென்படுவதாக இல்லை. எனவே, கொழும்புத் தலைமையைச் சந்தித்துவிட்டு வன்னிக்கு வருகைதரும் சொல்ஹெய்ம் - கொண்டுவரும் அரச தரப்புச் செய்தியில் எதுவும் இருக்கப்போவது கிடையாது என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து நிலைப்பாடாகும்.


ஆனால், அவர் திரும்பிச் செல்லும்போது விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாடு குறித்த இறுதித் தெளிவை அவருக்கு அளிக்கக்கூடும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதற்கிடையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரச உலங்கு வானூர்திகள் இனிமேல் தரையிறங்கப் போவதில்லை என விமானப்படை தரப்பு அறிவித்திருப்பது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக்கூட படைத்தரப்பினரின் விமான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப் பட்டிருப்பதையே உறுதி செய்கிறது.

இதற்குப் படைத்தரப்பினர் கூறும் விளக்கம் வினோதமானது, அர்த்தமற்றது. புலிகளின் விமானங்கள் விமானப்படை விமான ஓடுதளம் குறித்த செய்திகள் கடந்த ஆறேழு வருடங்களாகவே இராணுவப் புலனாய்வுப் பிரிவால் பரப்பப்பட்டுவரும் நிலையில் இப்போது இது பாதுகாப்புக்கு குந்தகமாகுமெனக் கூறுவது வேடிக்கையானதாகும்.

இதற்கு வேறு உள்நோக்கம் இருக்கும் என்றே தோன்றுகிறது. அத்தனை நோக்கமும் சமாதானத்தைச் சிதைப்பதையே தளமாகக் கொண்டிருக்கும் என்பதிலும் தவறு இல்லை என்றே நம்பத் தோன்றுகின்றது.

## நாடும் நடப்பும்




# தேசியத் தலைவரின் வழியில் சென்று சுதந்திர தமிழீழத்தைப் பெறுவோம்!

## தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

எமது தலைவரின் மாவீரர் உரையில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களை சிங்கள தேசமும், சிங்களத் தலைவர்களும் புறக்கணிப்பார்களானால், சுதந்திர தமிழீழத்தை தலைவர் வழியில் சென்று தமிழர்கள் அடைவார்கள்.

இவ்வாறு நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் -

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் ஆகின்றன. அரசால் சொல்லப்பட்ட எந்தவொரு விடயங்களும் நிறைவேற்றப்படாத சூழ்நிலையில் அவல வாழ்வு வாழ்ந்துவரும் தமிழ்மக்களின் துயரங்களையோ, இன்னல்களையோ சிங்கள தேசமும் அதன் தலைமைகளும் சரியாகப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அல்லது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையோ, இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கான ஏற்றசூழ்நிலையோ இதுவரை அரசியல் தலைமைகளால் எடுக்கப்படவில்லை. இப்படியாக சமாதானத்தின் பேரால் கடந்த மூன்றாண்டுகள் எந்தவொரு பலனையும் எமது மக்கள் அடையமுடியவில்லை.

எமது தேசியத் தலைவர் மாவீரர் தின உரையில் சுட்டிக்காட்டியதுபோல - எமது மக்கள் சமாதானமும் இல்லாமல், போரும் இல்லாமல் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக்கிடக்கமுடியாது.

பொறுமைக்கும் எல்லையுண்டு.அந்த எல்லைக்கோட்டில் இன்று நிற்கிறோம் என்ற தீர்க்கதரிசனமான எமது தலைவரின் உரையில் பொதிந்துள்ள ஆழமான அர்த்தங்களை சிங்கள தேசம் புறக்கணிக்குமெனின், உதாசீனம் செய்யுமெனில் சுதந்திர தமிழீழ அரசை தலைவர் வழிசென்று தமிழர்கள் அமைப்பார்கள்.

அதற்கான இழப்புக்களை கடந்த 50 வருடங்களாக சந்தித்து வந்திருக்கிறோம் என்ற அடிப்படையில் தமிழினம் எதற்கும் தயாராக இருக்கிறது.

போரா - சமாதானமா இந்த நாட்டில் தேவை என்பதை சந்திரிகாவினுடைய உதடுகள் சொல்லட்டும். தமிழர்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். இதனாலேயே கடந்த மூன்று வருடங்களாக பல இழப்புக்கள் மத்தியிலும் நமது தேசியத் தலைவர் பொறுமைகாத்து வருகின்றார். காத்திருப்புக்கான காலமும் விடைசொல்லவேண்டிய கட்டமும் நெருங்கி வருகிறது எனத் தெரிவித்தார். (17)

## சுத்திகரிப்பு தொழிலாளர்களின் மறியல் போராட்டம் நேற்றுடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஊழியர்கள் கடந்த பல நாட்களாக மேற்கொண்டு வந்த மறியல் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

குருநகர் - திருநகர் சம்பவங்களின்போது ஏற்பட்ட பதற்ற நிலைமையைத் தொடர்ந்து தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக சுத்திகரிப்பு பணியாளர்கள் தமது பணியைக் கடந்த மாதம் பகிஷ்கரித்தனர்

தொடர்ந்து சுத்திகரிப்பு தொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி, கடந்த 7 ஆம் திகதி முதல் மாநகர சபைக்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். இதனால் மாநகர சபை சுத்திகரிப்பு பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

இந்த நிலையில் சுத்திகரிப்பு தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் நேற்று யாழ். மாநகர சபை ஆணையாளர் கலந்துரையாடி ஒரு சுமுகமான தீர்வு வழங்கப்பட்டதை அடுத்து, காலை 11 மணியுடன் தமது மறியல் போராட்டத்தைக் கைவிட்டுத் தமது வழமையான பணிகளைத் தொடங்கினர்.

## முன்பள்ளி அமைத்து தருமாறு வீட்டுத்திட்ட மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் மக்கள் தமது பிள்ளைகள் கல்வி பயில முன்பள்ளி ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்பொழுது தற்காலிக இடமொன்றில் இயங்கும் முன்பளளியில் 45 சிறார்கள் கல்வி கற்கின்றனர். எந்தவித அடிபபடை வசதிகளுமற்ற நிலையில் இயங்கிவரும் முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் அமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 300 வீடுகளில் 150 இற்கும் மேற்பட்ட வீடுகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இந்தப் பகுதியில் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## காணாமற்போனோர் உறவினர்களுக்கான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் காணாமற் போனோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கலந்துரையாடலில், காணாமல் போனோரின் உறவினர்களுக்காக பிரதேச செயலர் ரீதியில் தையல் பயிற்சி வழங்கல், தையல் இயந்திரம் வழங்குதல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

## வாழைச்சேனை நகரில் கைக்குண்டு வீச்சுக்கள்!

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் நசீர் என்பவரின் வீட்டின் மீது கைக்குண்டொன்று வீசப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் வீட்டுக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றும், வீட்டின் முன்பகுதியும் சேதமடைந்தன.

இதேவேளை, மீராவோடையில் மோட்டார் சைக்கிள் திருத்துனர் ஒருவரின் வீட்டின்மீது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இரண்டாவது கைக்குண்டு வீசப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வாழைச்சேனையில் நேற்றுமுன்தினம் இரண்டு குண்டு வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

**செய்திக்கட்டுரை... - க.தர்ஜனன்**

# கவனிப்பாரற்று காணப்படும் கலங்கரை விளக்குகள்



தொண்டமானாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலுள்ள கரையோரப் பகுதிகளிலுள்ள எந்த வெளிச்ச வீடும் இயங்காமல் இருப்பதால் மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கரையோரப் பகுதிகளில் மூன்று கலங்கரை விளக்குகள் இருந்தும் அவை செயற்படாமல் இருப்பதன் காரணத்தால், ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

பருத்தித்துறை முனையிலுள்ள வெளிச்ச வீட்டை இயங்க வைப்பதற்கு, வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசம் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தபோதும் அது பலனளிக்கவில்லை.

இதனைவிட குடாரப்பு, வெற்றிலைக்கேணியில் இரு கோரி (உயர்ந்த கட்டடம்)கள் உண்டு. இவற்றை இயங்க வைப்பதற்குப் மீனவ சங்கங்களால் விடப்பட்ட கோரிக்கை குறித்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான சூழ்நிலை ஏற்பட்டு ஓரளவு சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதியளித்த பின், கூடுதலான கடற்தொழிலாளர்கள் ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இரவு வேளைகளில் அதிக தூரம் மீனபிடி வள்ளங்கள், படகுகள் சென்று தொழிலில் ஈடுபடுவதால், இவை கரை திரும்புவதற்கு இந்தக் கலங்கரை விளக்குகள் மிக அவசியமானவை.

தற்போது தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்படும் ஏராளமான கண்ணாடியிழைப் படகுகள், இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள் எனப் பல வகையான படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

மற்றும் சூறாவளி, புயல், கடற்கொந்தளிப்பு, மழை இருள் சூழ்ந்த காலங்களில் இந்தப் படகுகள் கரை திரும்புவதற்குக் கலங்கரை விளக்குகள் அவசியமானவை.

வடமராட்சி வடக்கில் மட்டும் 2000க்கும் மேற்பட்ட வள்ளங்கள், கண்ணாடியிழைப் படகுகள் என்பன ஆழகடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. வடமராட்சி கிழக்கு மணற்காடு முதல் சுண்டிக்குளம் வரை 1000க்கும் மேற்பட்ட வள்ளங்கள், கண்ணாடியிழைப் படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிப்பது மீன்பிடி ஆகும். அதுவும் வடமராட்சி வடக்கு, கிழக்கு பகுதிகள் மீன்பிடிக்குப் பெயர் போன இடங்களாகும். தற்போதும் தென்பகுதிகளுக்கு ஐஸ் போட்டு மீன்களை ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

இவ்வாறான மீன்பிடித் தளப் பிரதேசத்தில் எந்த வெளிச்ச வீடும் இயங்காதிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இதனைவிட, வடமராட்சி கிழக்கின் மையப்பிரதேசமான தாளையடியில் ஒரு வெளிச்ச வீட்டை நிறுவுமாறும் பல தடவை இந்தப் பகுதி மீனவர்களால் கோரிக்கைகள் விடப்பட்டும், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மழைகாலம் ஆகையால் இருள் சூழ்ந்த காலப் பகுதியிலும் கடற்கொந்தளிப்பு, புயற்காற்று வீசும் காலங்களிலும் மீனவர்கள் கரை திரும்புவதற்கு இந்த வெளிச்ச வீடுகள் அவசியமானவை.

இந்த நிலையில் ஆயிரக்கணக்கான மீனவர்களின் அததியாவசிய தேவையான இந்தக் கலங்கரை விளக்குகளை மீள இயக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்து கோரிக்கை விடப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பவியல்... - தவரூபன்**

# மின்னரசுக்கான ஏது நிலைகளும் தமிழ் தகவல் தொழில் நுட்பமும்

*(நேற்றைய தொடர்ச்சி)*

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயச் சந்தை விலைகளை விநியோகிக்கும் செயற்பாடாகும். கையடக்கக்கருவிகள் மூலமும், வர்த்தக நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள உபகரணங்களின்மூலம் பொருட்களின் விலைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படுகின்ற தகவல்கள் மத்திய நிலையத்துக்கு அனுப்பப்பட்டுச் சந்தைகளில் அமைக்கப்பட்டுள்ள பாரிய திரைகளில் காண்பிக்கப்படுகின்றன. இவற்றை இணையத்தளத்தின்மூலம் தற்போது (www.ggs.lk) தானியங்கி ஒளிப்பதிவுக் கருவிகளுடன் தொடர்புகொள்வதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். தம்புள்ளை மற்றும் மீகொட பொருளாதார நிலையங்களில் 2003 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும். அந்தத் திட்டத்தின் மூலம் தற்போது வர்த்தகர்கள் விற்பனையாளர்கள், விவசாய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவாளர்கள் பயன்பெறுகின்றனர். இது இன்னும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படவில்லை.

e-காசுக் கட்டளைகள் (e-MO):- இணையத்தளத்தை உபயோகித்துப் பொருட் களையும், சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கென கடன் - அட்டைகளுக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய இலத்திரனியல் கொடுப்பனவு வழிமுறையே e- காசுக்கட்டளையாகும். கொழும்பு பல்கலைக் கழகத்தில் தகவல் தொழில்நுட்ப இளமானி பயிற்சிக்கெனப் பதிவுசெய்து கொள்வதற்கு நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள சுமார் 26 இற்கும் மேற்பட்ட தபால் நிலையங்களில் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இரண்டுபேருக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்திசெய்யவும், மின்கட்டணம் போன்ற பாவனையாளர் சேவைகளுக்கான கட்டணங்களைப் பொதுமக்கள் செலுத்த உதவும் வகையில் பரவலாக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும், ஆரம்பிக்கப்பட்ட சுமார் 26 தபால் நிலையங்களில் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் திருகோணமலை தவிர்ந்த வேறு எந்த மாவட்டத்திலும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படாது புறக்கணிக்கப்பட்டமை வேதனைக்குரியது.

**சிங்கப்பூரில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழர் தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் 'வெப்.தமிழன்' இணையத்தள ஆசிரியர் தவரூபன் சமர்ப்பித்த கட்டுரை...**

விஸ்வஞான கேந்திரம் (VGK) என்பது பல்சேவை சமூக தகவல் மையமாகும். இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாகத் தற்சமயம் - மாத்தறை, எம்பிலிப்பிட்டிய, குருநாகல், நுவரெலியா ஆகிய இடங்களில் VGK நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

அலுவலகத்துக்கு அதிகாரம் அளித்தல்:- நவீன கணினிகளின்மூலம் நாளாந்தம் கடமைகளை அபிவிருத்தி செய்வதில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை உபயோகிக்கவென 671 அரச ஊழியர்களுக்கு மாத்தளையில் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பயிற்சிபெற்ற அரச ஊழியர்களின் தானியங்கிச் சேவைகள் மூலம் மாத்தளை வாழ் மக்களும் அரசாங்க சேவையாளர்களும் நன்மை அடைவார்கள். இந்தத் திட்டம் குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும் செறிவாக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டமையை தவிர்தது, நாடு தழுவிய ரீதியில் செய்திருக்க வேண்டும். உலக வங்கிபோன்ற அமைப்புக் களிடமிருந்து, கிடைக்கின்ற நிதி உதவிகளைத் தென்னிலங்கைக்கு மட்டும் பயன்படுத்தும் போக்கே தற்போது நிலவுகின்றது. நாடு பூராகவும் குறிப்பாகப் போரால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும், திட்டங்கள் செயற்படுத்த ஆவண செய்யவேண்டும்.

இவ்வாறான புறக்கணிப்புக்களும், அசமந்தப் போக்கும் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு சமூகத்தை மின்னரசிலிருந்து, தூர வைத்திருக்கவே வழிசெய்யும்.

இது தவிர கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் e - சமூகம் 2004 கண்காட்சியும், மாநாடும் இடம்பெற்றது. இதில் முற்றுமுழுதாகத் தென்னிலங்கையிலிருந்து தான் நிறுவனங்களும் பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் தமது தகவல் தொடர்பான தொழில் நுட்பம் சார்ந்த செயற்பாடுகளைக் காட்சிக்கு வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்துக்கும், ஓரளவுக்கேனும் இடம் வழங்கப்பட்டிருந்தமை மறுக்கமுடியாது.

இந்த நிலை மாறவேண்டும். இதற்குப் பொறுப்பானவர்கள் இது பற்றிச் சிந்தித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். நாடளாவிய ரீதியில் பங்களிப்புக்களைப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்கவேண்டும். அதற்குரிய சந்தர்ப் பங்கள் வழங்கவேண்டும்.

தற்போது உத்தமத்தால் பரிந்துரைக்கப்பட்டதும், தமிழக அரசா அங்கீகரிக்கப்பட்ட துமான விசைப் பலகையை (தமிழ் நெற் 99) ஈழத்திலும், உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதைவிடவும், தமிழ் சிங்கள தகுதரக் குறியீட்டிலும், தமது தரப்படுத்தல்களையும், பரிந்துரைகளையும் உத்தியோக பூர்வமாக வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறன.

இதற்கான குழு அமைக்கப்பட்டு, தனது இறுதி ஆவணத்தை அது வெளியிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக் கின்றது. இந்த முயற்சி நிச்சயம் ஈழத்தின் மின் அரசுக்கான பயணத்தின் முக்கிய மைல்கல்லாகும். இந்தக் கட்டுரையில் மேலதிகத் தகவல்களை அது சம்பந்தமாக வெளியிடுவது முறையல்ல எனக் கருதி தவிர்க்கின்றேன்.

குறிப்பாகத் தமிழ்த் தகவல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரை, அது தமிழர் களுக்கே உரியதானதும், தேவையானதும் ஆகும். ஈழத்தைப் பொறுத்தவரை அவர்களின் தேவைகள் மற்றைய சமூகத்தினரது தேவைகளினதும் நின்று, சற்று வேறுபட்டிருக்கிறது. காரணம் - ஈழத்தமிழர்கள் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் தொடர்ந்து கொண்டிருக்கும் புறக்கணிப்புக்களைக் கருத்திற்கொண்டும், தகவல் தொழில்நுட்பத்தின் ஈழத்த மிழர்களை மின்னரசு ஒன்றுக்கான பாதையில் இட்டுச் செல்லும் நோக்கிலும் தமிழர்களின் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த தரப்படுத்தல்களை நிர்வகிக்கவும், கொள்கைகளை வகுப்பதற்கும், ஆலோசனைகளை வழங்கி செயற்பாடுகளை முன்னெடுக்கவும் என புத்தி ஜீவிகளாலும் தமிழ் ஆர்வலர்களாலும் அரச சார்பற்ற அமைப்பொன்று நிர்வகிக்கப்படுகின்றது.


அதுதான் தமிழ் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு பேரவை (**Counil For Tamil Information Technology Development**) அதுவே தற்போது ஈழத்தில் தமிழ்தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் வழிநடத்துனராக தொழிற்படுகின்றது. இங்கு ஈழத்தில் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டதும் ஆதரவைப்பெற்றதுமான அமைப்பாக இது அறியப்படுகின்றது. தற்போது உத்தமல் போன்ற அமைப்புக்களுடன் உறவுகளை வளர்த்துக்கொள்வதிலும் நாட்டில் உள்ள தமிழ் மக்களின் தகவல் தொழில்நுட்பவளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

இத்தருணத்தில் தமிழ் மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்காக செயல்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கணைப்பினைப் பற்றியும் கூறவேண்டும். இந்த **TITA** அமைப்பு 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த அமைப்பினது சேவைகளை அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களே பறைசாற்றுகின்றன. இலங்கையில் குறிப்பாக தமிழ் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புவதில் கணிசமான பங்கை இவர்கள் வழங்கியுள்ளார்கள் வழங்கி வருகின்றார்கள்.

(தொடரும்...)

**நேர்காணல்: - பட்டனைந்து**

# எதிர்காலத்தில் நாடகத்துறைகளில் சிறுவர்களை இணைக்கப்படவேண்டும்



வண்ணைக் கலைவாணி நாடக மன்றத்தை உருவாக்கிய இரா.பற்குணம் (சீதாம்பரம்)தின் புதல்வன் ப.கருணாநிதி. இவர் ஒரு நாடகக் கலைஞர். தந்தையுடன் பல நகைச்சுவை நாடகங்களில் இப்பொழுதும் நடித்து வருகிறார். அதேவேளை புகைப்படக் கலைஞருமாக கருணாநிதி 'சாயி போட்டோ' எனும் ஒரு கலைக் கூடத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். அவருடன் உரையாடிய போது...

***நாடகத்துறையில் உங்கள் ஆரம்பம் எவ்விதம் அமைந்தது?***

ஆரம்பத்தில் எனது தந்தையார் பங்கு கொண்டிருந்த வண்ணைக் கலைவாணி நாடகக் குழுவுடனும், வில்லிசைக் குழுவுடனும் இணைநது தந்தை செல்வாவின் வரலாறு கூறும் வில்லிசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். வண்ணைத் தியாகன் தான் தந்தையாரிடம் வற்புறுத்தி 'வீரமைந்தன்' அரச நாடகத்தில் அமைச்சர் வேடத்தில் நடிக்க வைத்தார்.

***இதுவரை எத்தனை நாடகங்களில் நடித்துள்ளீர்கள்?***

ஏறத்தாழ இருபது இருபத்தைந்து நாடகங்களில் நடித்துள்ளேன்.

***அனைத்தும் நகைச்சுவை நாடகங்களா?***

வீரமைந்தன் மற்றும் 'கலைஞனின் கண்ணீர்'போன்ற அரச, சமூக நாடகங்களிலும் நடித்துள்ளேன்.

***இவற்றில் உங்களுக்குப் புகழ் தேடித்தந்ததாக எதைச் சொல்வீர்கள்?***

'வீரமைந்தன்', 'செல்லப்பிள்ளை', 'பரியாரியார் பரமசிவம்' ஆகிய நாடகங்களாகும். பரியாரியார் பரமசிவம் நாடகத்தில் 'பண்டா' என்னும் சிங்களப் பாத்திரமே எனக்கு மிகவும் புகழைத் தேடித் தந்தது எனலாம்.

***உங்கள் தந்தையாருடனும் சேர்ந்து நடித்துள்ளீர்களா?***

சேர்ந்து என்றில்லாமல் இணைந்து பெண் பாத்திரம் ஏற்றும் நடித்துள்ளேன். அவற்றில் 'மிஸ்ரர் கந்தப்பு', 'செல்லப்பிள்ளை', பரியாரியார் பரமசிவம்' ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

***அப்படியான சந்தர்ப்பங்களில் உங்களால் மறக்க முடியாத சம்பவங்கள்?***

'வீரமைந்தன்' நாடகத்தில் நடிக்கும்போது எனது வயது 12. வட்டுக்கோட்டை மாநாட்டில் நாடகம் மேடையேறியது. அதில்தான் நான் முதன் முதலில் தோன்றி நடித்தேன். 70 வயது அமைச்சர் பாத்திரம். ஒப்பனையாளர் வண்ணைத் தியாகன் என்னை ஒரு வயோதிபராகவே மாற்றிவிட்டிருந்தார். அதேபோல 'செல்லப்பிள்ளை' நாடகத்தில் தந்தையாருக்கு ஜோடியாகப் பெண் வேடத்தில் நடித்தது. இவை இரண்டையும் மறக்க முடியாது.



***உங்கள் கலைத் துறை வாழ்க்கைக்கு வித்திட்டவர்கள் அதாவது நாடகம், படப்பிடிப்புத் துறைகள்?***

எனது இருதுறைகளுக்கும் வித்திட்டவர்கள் பலர். நாடகத்துறைக்கு முதலாக எனது தந்தையார், எஸ்.ரீ.அரசு, ரீ.எஸ்.யோகநாதன், இளமுருகன் ஆகியோர். புகைப்படத்துறைக்கு ஆட்ஸ் மணியத்திடம் ஓவியம் கற்றபொழுது புகைப்படத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது. அதில் மாமனிதர் கலைஞானி, திருச் செல்வம், பேபி போட்டோ இராஜரட்ணம் ஆகியோர்.

***நீங்கள் நாடகம் எழுதியோ, நெறிப்படுத்தியோ இருந்தால் அவை?***

'பரியாரியார் பரமசிவம்' நான் எழுதிய நகைச்சுவை நாடகம். வசந்தகுமாரின் 'ஏமிற்செல்வாய்' இளமுருகனின் 'கலைஞனின் கண்ணீர்' நான் இயக்கிய நாடகங்களாகும்.

***இப்பொழுதெல்லாம் உங்கள் நாடகங்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்கிறதா?***

தற்சமயம் நாட்டுப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நாடகங்களை ரசிப்போரும், ஊக்கம் கொடுப்போரும் ஒருசிலர் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால் முன்பு போன்ற அளவுக்கு இல்லை என்றுதான் கூறவேண்டும். அதற்குத் தொலைக்காட்சியின் வருகையும் பெரும்பங்கு வகிப்பதை சொல்லலாம்.

***அப்படியானால் நாடகக்கலையை மீண்டும் நிமிர்த்துவதற்கு உங்களின் கருத்து?***

நாடகக் கலை கட்டி வளர்க்க வேண்டிய ஒன்று. நாடகங்கள் மூலம் கருத்துக்களை உடனடியாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல முடியும். அப்படிச் சாதித்ததை ஒன்றிரண்டு இல்லை அனந்தம். முன்பு போல் ஒவ்வொரு ஊர்களிலும் இடம்பெறும் கலை விழாக்களில் நாடகங்களை மேடையேற்றி வளர்க்கவேண்டும், பெரியோர்கள் ஊக்கம் கொடுக்க முன்வரவேண்டும். அப்பொழுதே இந்தத் துறையில் சிறுவர்களையும் உருவாக்கக்கூடியதாக இருக்கும். எதிர்காலத்தில் நல்ல நாடகங்களைப் படைக்க முடியும்.

***இறுதியாக நீங்கள் பொதுவாகச் சொல்ல விரும்புவது?***

நாடகங்கள் மூலமாக சமூகத்துக்கு நல்ல பல கருத்துகளை வழங்க முடியும். நமது போராட்ட வரலாறு, அதே கால வாழ்வியல் முறைமைகளை நாடகங்களாக்கி வந்தால் நாடகத்துறையின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல முடியுமென பதுதான் எனது கருத்துமாகும். ❄

# ஈராக்கில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 8 அமெரிக்கப் படையினர் உட்பட 21 பேர் பலி! 15 பேர் படுகாயம்!!



(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதல் அமெரிக்கப் படைகள் சதாமைப் பிடித்த முதலாமாண்டு நிறைவில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அன்பார் மாகாணத்தில் கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் எட்டு அமெரிக்க கடற்படையினர் கொல்லப்பட்டனர். கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஈராக் பொதுமக்களென வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இந்தத தாக்குதலில் கூட்டணிப் படைகளைச் சேர்ந்த எவரும் கொல்லப்படவோ அல்லது காயமடையவோ இல்லையென அமெரிக்க இராணுவப் பேச்சாளர் லெப்.கேணல் ஜேம்ஸ் ஹட்டன் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்கப் படையினரின் இரகசியச் சிறையிலுள்ள ஏழு சதாம் ஹூசைனின் முன்னாள் உயர் அதிகாரிகள் உணவு உட்கொள்ள மறுத்துவருவதனை அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. இதனைவிட மினிபஸ் ஒன்று கார்த்தொகுதி ஒன்றுடன் மோதியதில் ஏற்பட்ட எரிபொருள் வெடிவிபத்தில் 21 பேர் உயிரிழந்ததாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சதாம் ஹூசைனின் ஆட்சிக்காலத்தில் இருந்த பாதுகாப்பு விடயங்களை நீக்கியதால் ஏற்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினைகளே தற்போதைய சம்பவங்களுக்குக் காரணமென ஈராக் ஜனாதிபதி காசி யாவீர் குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன் பல அனுபவம் வாய்ந்த படையினரை விலக்கிய பின்னர் சாதாரண படையினரை நியமித்தமையானது மிகவும் மெதுவான படைக்கட்டுமானத்தையே கொண்டுள்ளதாகவும். அவர் தெரிவித்தார்.

ஈராக்கிய அரசாங்கம் அடுத்தவருடம் ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன்னர் மக்களுக்கான பாதுகாப்பை வழங்கி, நிலைமையை முன்னேற்றகரமாகக் கொண்டுவருவதற்கான முன்னுரிமையை அளிக்கவுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

# கொங்கோவின் படைகளில் 2 குழுக்களுக்கிடையே மோதல்



றுவாண்டா ஆதரவுபெற்ற கொங்கோ படைகளிலுள்ள இராணுவத்தினருக்கும், கொங்கோ படையினருக்கும் இடையே மீளவும் அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் மோதல்கள் ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையை அடுத்து 2002 ஆம் ஆண்டு றுவாண்டா ஆதரவு பெற்ற படைகள் கொங்கோ தேசிய இராணுவத்துடன் இணைத்துக்கொள்ளப்பட்டபோதும், இந்த வருடம் பல தடவை இரண்டு படைகளும் தமக்கிடையே மோதிக் கொண்டுள்ளன.

இந்த மோதல்களையடுத்து கொங்கோவின் கிழக்குப் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த இருபகுதி மோதல்களில் கொங்கோ படைவீரர்கள் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்ததாகவும், அப்பகுதியிலுள்ள பெருமளவு வீடுகளில் படையினர் கொள்ளைகளில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இடம்பெற்றுவரும் மோதல்கள் மிகவும் கடுமையானதாக உள்ளதாகவும், முன்னாள் கிளர்ச்சிவாதிகளும், தற்போது றுவாண்டாவின் ஆதரவு பெற்றவர்களுமான படையினர் மிகவும் ஒழுக்கமற்ற முறையில் நடந்துகொள்வதாகவும், கொங்கோவின் இராணுவ அதிகாரியான பிண்டு தெரிவித்தார்.

தற்போது கொங்கோவின் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல்களைப் பார்க்கும்போது அந்தப்பகுதியில் றுவாண்டாப் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுவதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

கொங்கோவின் கிழக்குப் பகுதியிலுள்ள ஹிட்டு இனத்தவர்கள் மீது மீளவும் தாக்குதல் நடத்தப்படுமென றுவாண்டா அச்சுறுத்தியதை அடுத்து அந்தப் பகுதியின் எல்லையில் 10 ஆயிரம் படையினரை நிறுத்தப் போவதாக கொங்கோ ஜனாதிபதி ஜோசப் கபிலா தெரிவித்தார்.

# பலஸ்தீன ஹமாஸ் தாக்குதல் ஐந்து இஸ்ரேல் படையினர் பலி

பலஸ்தீன ஹமாஸ் அமைப்பின் பத்தா குழு நடத்திய தாக்குதலில் இஸ்ரேலியப் படையினர் ஐவர் கொல்லப்பட்டதுடன், மேலும் ஆறுபேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் நேற்றுமுன்தினம் எகிப்தின் எல்லைப் பிரதேசமான ரபாவிலுள்ள இஸ்ரேலியச் சோதனைச் சாவடியில் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதல் மிகவும் திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது இஸ்ரேல் படையினரின் இழப்பு மிகவும் அதிகம். அத்துடன் இஸ்ரேலிலிருந்து எகிப்திற்குச் செல்லும் பாதையும், மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளதென இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளரான கப்டன் ஜேக்கப் டலால் தெரிவித்தார்.

பலஸ்தீன தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் மிகவும் வருந்தத்தக்கது. நாம் எமது படைகளை பலஸ்தீனத் தோதல் நடைபெறுவதற்காகக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தோம். இதனால் `பயங்கரவாதிகள் தமது செயற்பாடுகளைத் தொடர்ந்த வண்ணமேயுள்ளனர். இதன்மூலம் அவர்கள் சமாதான முயற்சியைச் சீர்குலைத்துள்ளனரென பிரதமர் ஷரோனின் உதவியாளரான ரானான் இசின் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் நேற்றுக்காலை காஸாப்பகுதி மீது றொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளன. இந்தத் தாக்குதலில் உலோகத் தொழிற்சாலைகளும் இலக்கானது. இதன்போது ஏற்பட்ட சேதவிபரம் தெரிய



வராதபோதிலும், காஸாப் பகுதியில் மின் விநியோகத்தை மேற்கொண்டிருந்த மின் பிறப்பாக்கி செயலிழந்ததால் நகரத்திற்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தது.




# ருமேனிய ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் முன்னிலை



ருமேனியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எண்ணப்பட்ட வாக்குகளில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த வலதுசாரி வேட்பாளர் பேஸ்கு முன்னணியில் உள்ளார்.

இதுவரை 92 வீத வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டுள்ளன. இதில் எதிர்க்கட்சி வேட்பாளர் 51.7 வீத வாக்குகளைப்பெற்று முன்னிலை வகிக்கின்றார். ருமேனியாவுக்கு அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படவுள்ளவர் 2007 இல் ருமேனியாவை ஐரோப்பிய யூனியனுடன் இணைத்துக்கொள்வார்.

ஆனாலும், ருமேனியாவில் யார் பதவிக்கு வந்தாலும் ஐரோப்பிய யூனியனின் உறுப்புரிமையைப் பெறுவதற்கு ருமேனியாவில் விரைவான சீர்திருத்தமொன்றை மேற்கொள்ளவேண்டியிருக்கும் என பி.பி.ஸி செய்தியாளர் நிக் தோர்ப் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்த வெற்றியை அவரது ஆதரவாளர்கள் பெருமெடுப்பில் கொண்டாடிவருகின்றனர். ஆனால், இந்த நிகழ்வுகளை அமைதியான முறையில் நடத்திவிட்டு விலகிச்செல்லுமாறு பேஸ்கு கேட்டுக்கொண்டபோதிலும், அவற்றை ஆதரவாளர்கள் கேட்பதாகத் தெரியவில்லை.

கடந்த 28 ஆம் திகதி ருமேனியாவில் இடம்பெற்ற தேர்தலில் தற்போதைய பிரதமரான நாஸ்ரஸ் 41 வீத வாக்குகளையும், பேஸ்கு 34 வீத வாக்குகளையும் பெற்றிருந்தனர். ஆனால், ருமேனியாவில் வேட்பாளர் ஒருவர் 50 வீத வாக்குகளைப் பெறவேண்டும் என்ற நிலையுள்ளதால் மீளவும் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

# கொலம்பிய ஆட்கடத்தல் சூத்திரதாரி அந்நாட்டு படைகளால் கைது!

கொலம்பியாவில் இடம்பெற்றுவந்த ஆட்கடத்தல்களுக்கு மூல காரணமாக விளங்கிய கொலம்பிய தேசிய விடுதலை இயக்கத்தின் சிரேஷ்ட தலைவரான ஜோஸ் றமிறிஸ் - கொலம்பியப் படைகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலம்பியாவில் இடம்பெற்றுவந்த ஆட்கடத்தல் மற்றும் பணயக் கைதிகளை வைத்துப் பணம் வசூலித்தல் ஆகியவற்றால் பெயர்போன றமிறிஸ், 1999 ஆண்டு கொலம்பியாவின் ஹலி நகரத்தினை கலங்கடித்தவராவார்.

முக்கியமாக ஜோஸ் றமிறிஸ் - ஹலி



நகரிலுள்ள லா மரியா தேவாலயத்தில் இடம்பெற்ற ஆராதனையின்போது, மதகுரு உட்பட ஆராதனையில் ஈடுபட்டவர்கள் சிலர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்தார்.

றமிறிஸ்சினை கொலம்பியாவின் தென் பகுதி மாகாணமான நலினோவிற்கும், ஈக்குவடோர் நாட்டு எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்துக் கைதுசெய்ததாகத் தெரிவித்த கொலம்பியப் படைகள், கைது செய்யப்பட்ட சமயம் இவருடன் உதவியாளர்கள் யாராவது இருந்தார்களா? அவர்கள் கைது செய்யப்பட்டார்களா போன்ற விடயங்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

லா மரியா தேவாலயத்தில் இடம்பெற்ற இந்தக் கடத்தல் சம்பவமானது, பாப்பரசரின் கண்டத்திற்கு உள்ளாகியதையும், நாட்டு மக்களிடையே படையினருக்குப் பலத்த அவமானத்தை ஏற்படுத்தியதையடுத்தே, றமிறிசினைக் கைதுசெய்யும் இராணுவ நடவடிக்கையைக் கொலம்பியப் படைகள் ஆரம்பித்திருந்தன.

# கப்பல் பணியாளரை மீட்கும் முயற்சி கைவிடப்பட்டது!

(அன்கோரஞ்)

அலஸ்கா தீவில். விபத்தில் சிக்கிய கப்பல் ஊழியர்களை மீட்கும் முயற்சி கைவிடப்பட்டது.

மலேசியாவைச் சேர்ந்த சரக்குக் கப்பல் ஒன்று கடந்த புதன்கிழமை அலஸ்கா தீவில் சென்றுகொண்டிருந்தபோது, சூறாவளியில் சிக்கி இரண்டாகப் பிளந்தது. அதில் பயணஞ் செய்த ஊழியர்கள் அமெரிக்க கடற்படை ஹெலிகொப்டர்மூலம் மீட்கப்பட்டனர். அப்போது எதிர்பாராதவிதமாக ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியது.

இதில் ஆறு ஊழியர்கள கடலில் வீழ்ந்தனர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடந்தது. நேற்றுமுன்தினம் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

கடல் நீரின் வெப்பநிலை ஆறு செல்சியசுக்கும் குறைவாக உள்ளது. இதனால் கடலில் வீழ்ந்த ஊழியர்கள் உயிர்பிழைக்கும் வாய்ப்புகள் குறைவு என்பதால் மீட்புப் பணியினர் தேடுதல் முயற்சியைக் கைவிட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# நாட்டுப்பற்றாளர் சொக்கனின் பூதவுடல் தீயுடன் சங்கமம்!

நாட்டுப்பற்றாளரும் தமிழ் அறிஞருமான கலாநிதி சொக்கலிங்கத்தின் இறுதிச் சடங்கு நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, நேற்றுமாலை செம்மணி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

நாட்டுப்பற்றாளர் சொக்கலிங்கத்தின் இல்லத்தில் ஆறு.திருமுருகன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் அஞ்சலி உரைகளை வைத்திய கலாநிதி நந்தி, அருட்தந்தை ஜெபநேசன், இலக்கிய வட்டத்தின் சார்பாக யாழ். மாநகரசபை ஆணையாளர் குணராஜா, தமிழீழ கல்விக் கழக துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், பேராசிரியர் சண்முகதாஸ், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பண்டிதர் திருநாவுக்கரசு, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம், வலிகாம கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், தமிழீழ கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, தேசியக் கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தனபாலன், ஆசிரியர் விஜயசுந்தரம், அகில இலங்கை கம்பன் கழகம் சார்பாக ஜெயசீலன், ஆவரங்கால் கிருஸ்ணராஜா, நாயன்மார்கட்டு சிவராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அவரின் உடல் தாங்கிய பேழை அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டு செம்மணி மயானத்தில் வைக்கப்பட்டு இறுதி அஞ்சலி உரையினை யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

மாலை 4.00 மணிக்கு நாட்டுப்பற்றாளர் தமிழ் அறிஞர் கலாநிதி சொக்கனின் உடல் தகனம் செய்யப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் இறுதியாக நாட்டுப்பற்றாளர் சொக்கலிங்கம் எழுதி நேற்று வெளியிட இருந்த நூல் ஒன்று அவருக்காக சமர்ப்பணம் செய்துவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## உழவு இயந்திர விபத்தில்

# மாநகரசபை தொழிலாளர்கள் நால்வர் காயமடைந்தனர் !

யாழ். மாநகரசபைத் தொழிலாளர்கள் சென்ற உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் அஞ்சல் நிலைய வீதிக்கு முன்பாக இடம்பெற்றது. இந்த விபத்தில் திருநகரைச் சேர்ந்த குணராஜா சத்தியராசா (வயது 24) கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் திருநாவுக்கரசு (வயது 24) திருநகரைச் சேர்ந்த ஜெயசீலன் ரூபன் (வயது 27), நேசராசா சின்னத்துரை ஆகிய நால்வருமே காயடைந்தவர்களாவர்.

மேற்படி ஊழியர்கள் வந்த உழவு இயந்திரப் பெட்டி இயந்திரத்துடனான இணைப்பிலிருந்து திடீரெனத் துண்டிக்கப்பட்டு கீழே விழுந்ததன் காரணமாகவே மேற்படி விபத்து ஏற்பட்டது. காயமடைந்தவர்கள் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## வெள்ளத்தால்...

வதற்காகத் தற்காலிகமாக பூனாவ கடற்படைத்தளத்திலிருந்து படகுகள் அனுப்பப்பட்டுள்ளன. அனுராதபுரம் - திருகோணமலை, அனுராதபுரம் - வவுனியா பிரதான வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது பெய்யும் அடைமழை காரணமாக அனுராதபுர மாவட்டத்தில் உள்ள ஹொரவப்பொத்தான, கலேன்விந்துனுவெவ குளத்தின் அணைக்கட்டுக்கள் உடைபெடுத்திருக்கின்றன. வவுனியா - திருகோணமலை வீதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமத்திய மாகாணத்தில் ராஜாங்கிண, கலாவெவ, போகக்வென்ன, நீர்த்தேக்கங்களின் கண்மாய்க் கதவினைத் திறந்துவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை வெள்ளப்பெருக்குக் காரணமாக கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் தோற்றமுடியாத மாணவர்களுக்கு மீண்டும் தோற்றுவதற்கான வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மோட்டார் சைக்கிள்...

இதன்போது இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இறந்த ஒருவரின் தலை சிதறிய நிலையிலும், மற்றவரின் காலில் பலத்த காயமும் காணப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு சென்ற கொடிகாமம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதுடன் இருவரின் சடலத்தையும் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

## வழங்கப்படாததை...

இதற்குச் சாதகமான பதில் கிடைக்காவிடின் தொடர்ந்து இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக மறியலில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 7 மணிமுதல் சுமார் இரண்டுமணி நேரம் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் யாழ் செயலகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சந்தித்துப் பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு காணப்படும் என உறுதியளிக்கப்பட்டமைக்கு அமைய மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

தொடர்ந்து யாழ் செயலகத்தில் அரச அதிபருடன் மக்களின் பிரதிநிதிகள் சந்தித்தபோது - மிக விரைவில் மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

## விமானப்படை...

படாததால் அங்கு தரையிறங்க அனுமதிக்கப்படாததுடன், ரஷ்யாவின் றொங்றோவ் விமான நிலையத்தில் தரையிறங்க ஆலோசனை கூறப்பட்டது.

இதனையடுத்து மிகக் குறைந்தளவு எரிபொருட்களுடன் இந்த விமான நிலையத்தில் இரண்டு விமானங்களும் தரையிறங்கின. ஆனால் இதற்கு முன் அனுமதி பெறப்படாத அதேவேளை விமானங்களில் பயணம் செய்தோரிடம் விசாவும் இருக்கவில்லை.

இதனால் விமானத்தைவிட்டு கீழிறங்குவதற்கு அந்த நாட்டு அதிகாரிகள் தடைவிதித்தனர். 20 மணி நேரத்துக்குமேலாக விமானத்துக்குள் இருந்தவர்களை வெளிவிவகார அமைச்சு மீட்பதற்கு பெரும் பிரயத்தனப்பட்டது.

திருத்தப்பட்ட விமானங்கள் உரிய ஆவணங்கள் எதுவுமின்றி பறப்பை ஆரம்பித்தமை குறித்து இலங்கை விமானப் படை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விமானப்படைத் தளபதி, வெளிவிவகார அமைச்சு ஊடாக ரஷிய அரசுடன் தொடர்பு கொண்டதையடுத்தே 12 சிப்பந்திகளும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 12 பேரில் 2 விமானப் படை அதிகாரிகளும், 2 விமானிகளும், 2 துணை விமானிகளும் அடங்குகின்றனர்.

விமானப் படையின் 22 ஆவது ஸ்குவாட்ரன் கட்டளை அதிகாரியான வின்கொமாண்டர் பிரியத் அதிகாரி ஒரு விமானக் கப்டனாவும், மற்றொரு விமானத்தின் கப்டனாக 22 ஆவது ஸ்குட்டினைச் சேர்ந்த ஸ்குவாட்ரன் லீடர் ரணில் விக்கிரமசிங்கவும் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கு – கிழக்கில் கடும் மழை...

யேறியவண்ணமுள்ளது. ஆனாலும் குளத்துக்கு வரும் நீரின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்தவண்ணமுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றைய 12 மணிநேரக் கணக்கெடுப்பில் 92.9 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது.

கிளிநொச்சியூடாக வட்டக்கச்சி செல்லும் பாதை வெள்ளம் குறுக்கறுத்துப் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பரந்தன், முல்லைத்தீவு வீதியில் 10 ஆம் மைல் பகுதியில் வெள்ளம் வீதியை குறுக்கறுத்துப் பாய்வதால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

இதுபோலவே ஏ-9 வீதியில் ஆனையிறவு, உமையாள்புரம் பகுதியிலும் பளை, இயக்கச்சிப் பகுதியிலும் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. கனகராயன் ஆற்றுக்கரையோரமாக வதியும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழையை அடுத்து முத்தையன்கட்டு குளத்தின் வான் கதவுகள் இரண்டும் 5 அடிக்கு திறந்துவிடப்பட்டுள்ளன. ஆனாலும் குளத்துக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துக் காணப்படுவதால் பெரும் நெருக்கடிநிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுடன் பேராறு பெருக்கெடுத்துள்ளதால் கெருடாமடு - ஒட்டுசுட்டான் வீதி போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளதுடன், அப்பகுதியிலிருந்த 9 கிராமங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்ததால் 2,630 குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஒட்டுசுட்டான் மற்றும் முத்தையன்கட்டு பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளன. இவர்களுக்கான உடனடி உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது. அத்துடன் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு வீதி போக்குவரத்துக்கு தடைப்பட்டுள்ளது.

மல்லாவியில் குமுதன் குடியிருப்பில் வெள்ளம் புகுந்ததால், அங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் அவர்களின் வீடுகளும் இடிந்து வீழ்ந்துள்ளன.

தற்போது யாழ்.குடாவில் பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதுடன் க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்றுக்காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிமுதல் முடிவடைந்த 9 மணி நேரத்தில் யாழ். குடாநாட்டில் 20.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குடாநாட்டின் தாழ்நிலப் பிரதேசங்களான பொம்மை வெளி, மற்றும் ஆனைக்கோட்டை போன்ற பகுதிகளில் வெள்ள நீர் வீடுகளுக்குள் உட்புகுந்ததால் மக்கள் இடம் பெயர வேண்டிய நிலையிலுள்ளனர். இவற்றுடன் நல்லூர் யமுனா நீர் ஏரிப் பகுதியில் வெள்ளம் மேவி வீதியில் ஓடுவதனால் அந்தப் பகுதியிலுள்ள குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தென்மராட்சி பகுதியில் மிருசுவில், வரணி, கொடிகாமம் போன்ற பகுதிகளில் கடும் மழை காரணமாக மழை நீர் வீதிகளை குறுக்கறுத்துப் பாய்கின்றது. இதனால் அந்தப் பகுதிகளூடான போக்குவரத்து பலத்த சிரமத்தின் மத்தியிலேயே நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் மானிப்பாய், சங்கானை, இணுவில் போன்ற இடங்களில் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை - அம்பாறை மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக பெய்துவரும் அடைமழையால் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை ஆகிய தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இப்பகுதியிலுள்ள பெரும்பாலான வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் இடம்பெயர்ந்து அருகிலுள்ள ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கல்முனை - அம்பாறை, கல்முனை - பொத்துவில் வீதிகளிலுள்ள வாய்க்கால்களை மேவி வெள்ளம் பாய்வதால் அந்த வீதிகளூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களில் மட்டும் 190 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அம்பாறை மாவட்ட வானிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

அக்கரைப்பற்று - பொத்துவில் பெரியகளப்பு பாலத்தினூடாக வெள்ளம் பாயமுடியாது வீதிகளை மூடியுள்ளதால் அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் உடும்பன் குளம் கோட்ட அரசியற்துறையினர் இந்த வீதியூடாக படகுச்சேவையை நடத்துகின்றனர்.

இதனால் நேற்று ஆரம்பமான க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றச் சென்ற மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் இந்தப் படகினூடாக போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று நாள்களாக பெய்துவரும் கடும் மழையால் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதில் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி, கிரான், வாகரை, களுவாஞ்சிக்குடி ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் இடம்பெயாந்து பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். தற்போது க.பொ.த சாதாரண தர பரீட்சை நடைபெற்றுவருவதனால் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளில் தங்கமுடியாத நிலையிலும் உள்ளனர்.

மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவிலும் நாவற்குடா சத்துருக்கொண்டான் ஆகிய பகுதிகளிலும் மழை நீர் தேங்கியுள்ளதனால் அப்பகுதி மக்களும் இடம் பெயரும் நிலையில் உள்ளனர். இவற்றைவிட மட்டக்களப்பின் பிரதான வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளதனால் போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அத்துடன் குளங்கள் பலவும் நிரம்பி வழிவதனால் அவற்றில் தொழிலுக்காக மீனவர்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தோணிகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

விவசாய நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதனால் கதிர் வந்த நெற் பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகள் வழங்குவதற்காக 15 மில்லியன் ரூபாய்களை அரசாங்க அதிபர் அவசர உதவியாக அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

திருமலையில் கிண்ணியா பிரதேச சபை, தம்பலகாமம் பிரதேச சபை, குச்சவெளி பிரதேசசபை புல்மோட்டை, மொரவேவா, சேருவல ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் முழ்கியுள்ளன. அல்லை கந்தளாய் வீதி கிண்ணியா தம்பலகாமம் திருகோணமலை - கொழும்பு வீதி ஆகிய வீதிகளை ஊடறுத்து வெள்ளம் பாய்வதனால் இந்த வீதிகளுடனான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் இயல்பு வாழ்க்கை முற்றாக தடைப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று மாலை வரை எந்தவித நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக பெய்துவரும் கடும் மழையினால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியாக் குளம், சமளங்குளம், மறவன் குளம், நெழுக்குழம், இறம்பை வெட்டிக் குளம் உட்பட 10 இற்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பியுள்ளதால் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. வவுனிக் குளம் ஒரு அடி வான் பாய்வதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்கள் பெய்துவரும் மழையினால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்ததுடன் வீதிகள், வாய்க்கால்கள் உரிய முறையில் புனரமைக்கப்படாமையால் வீதிகளை மேவி வெள்ளம் பாய்கின்றது. இதனால் போக்குவரத்து குறைவடைந்துள்ளது.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்திற்கு முன்பாகவுள்ள வாய்க்கால்கள் நிரம்பி வெள்ளம் வீதியை மேவிப் பாய்வனதால் முகாமில் வாழும் மக்கள் பல்வேறு கஷ்டங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

நேற்று மாலை வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் 113 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்னும் சில தினங்கள் மழை தொடர்ந்து பெய்யுமானால் பெரும்போக பயிர்ச்செய்கை முற்றாக பாதிப்படையும் என கமநல திணைக்கள அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் 5 அயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் செயலகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

தாழ் நகரப் பகுதிகளில் உள்ள விவசாயநிலங்கள், குடியிருப்புக்கள் வெள்ளத்தில் முழ்கியுள்ளதுடன் தாழ் நிலப் பகுதியிலுள்ள நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பாடசாலைகளில் தங்கியுள்ளன.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் பறங்கி ஆறு 10 அடி வான் பாய்கிறது.

முஸ்லிம் வீதி, புனித சவேரியார் வீதி, சாவற்காடு ஆகிய இடங்களில் வீதிகளை மேவி வெள்ளம் பாய்வதால் அந்த வீதிகளுடனான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நேற்று ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில். 18.5 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மன்னார் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(03,07,10,201)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.